லை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: இருபது

ங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 16 வியாழக்கிழமை (01.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## சீரற்ற காலநிலையால்
## பல்லாயிரக்கணக்கானோர் பாதிப்பு
### பெண் உட்பட மூவர் மழைக்குப் பலி

(கொழும்பு)

நாட்டில் கடந்த நான்கு தினங்களாக நில வும் சீரற்ற காலநிலை காரணமாக பெண் ணொருவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளது டன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த அனர்த்தங்களினால் 13 ஆயி ரத்து 74 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயி ரத்துக்கும் அதிகமானோர் பரதிக்கப்பட் டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட 13 மாவட்டங்களில் 40 கிராம சேவகர் பிரிவு களில் ஏற்பட்ட கடும் காற்று, வெள்ளப்பெருக்கு, கடலரிப்பு, கடும்மழை மற்றும் மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்களினாலேயே இவர்கள் பாதிக் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இன்று
## ஐ.நாவில் கண்டம்

(நியூயோர்க்)


ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை கள் பேரவையில் இன்று இலங்கை குறித்த விவாதம் நடக்கவுள்ள நிலையில் பிற உறுப்பு நாடுகள் இலங்கை மீது கடுமையான அழுத் தத்தை பிரயோகிக்க வேண்டும் என்று மனித உரிமை செயற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே தோற்கடிக்கப்பட்ட போதிலும் – இலங் கையின் மனித உரிமைகள் நிலை மோச மாகவே இருப்பதாக மனித உரிமை ஆர்வலர் கள் கூறுகின்றனர்

யுனிவர்சல் பிரியாடிக் ரெவ்யூ என்ற பொறிமுறையின் கீழ் ஐ.நா மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 192 உறுப்பு நாடுகளின் மனித உரிமை சூழ்நிலைகளும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது.

மனித உரிமைகளை மேம்படுத்தவும், மனித உரிமை தொடர்பான கடப்பாடுகளை பின்பற்றவும் (19ஆம் பக்கம் பார்க்க)


# ராஜீவ் கொலை தொடர்பில்
# கருணாநிதி விசாரிக்கப்படாதது ஏன்?



### கிளம்பியது புதிய சர்ச்சை

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான முக்கிய வீடியோ ஆதா ரத்தை எம்.கே.நாராயணன் மறைத்து விட்டதாக குற்றம் சாட்டி யுள்ள இவ் வழக்கின் தலைமை விசாரணை அதிகாரியாக இருந்த ரகோத்தமன், ஸ்ரீபெரும்புதூர் தி.மு.க. கூட்டத்தை கருணாநிதி ரத்து செய்தது ஏன் என்பது குறித்து அவரிடம் விசாரிக்கப்படவில்லை என்று புதிய சர்ச்சையை கிளப்பி யுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## அமைச்சர் விமல் உடனடியாக
## பதவி விலக வேண்டும்
### ரில்வின் சில்வா கோரிக்கை

(கொழும்பு)

ஆளும் கட்சி அமைச்சராக இருக்கும் விமல் வீரவன்சவின் பணி அரசாங்கத்திற்கு துதி பாடல் பாடுவதாகும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

அனைத்துக் கட்சிகளை இணைத்துக் கொண்டு 13-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை (20ஆம் பக்கம் பார்க்க)



## காணி அபகரிப்பு தொடர்பில்
## இன்று முக்கிய கூட்டம்
### டக்ளஸ், சந்திரசிறி இணைத் தலைமையில்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்புத் தொடர்பிலும், மீள்குடி யேற்றம் தொடர்பிலும் விரிவாக ஆராய்ந்து தீர்க்கமான முடிபென்றினை எடுப்பதற்காக யாழ்.மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று கூட்டப்படுகின்றது.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் இன்று காலை 9 மணியளவில் ஆரம்ப மாகும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற் றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைத்தலைமை தாங்கவுள்ளனர்.

கடந்த மாதம் 8-ம் திகதி இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்காலில்
## ஆட்லறிகள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வெள்ளாம் முள்ளிவாய்க் கால் பிரதேசத்தில் ஐந்து ஆட்லறிக் குண்டுகள் மற்றும் அதி குதிரை வலு கொண்ட இரண்டு படகு கள் ஆகியவற்றை நேற்றுப் புதன் கிழமை படையினர் மீட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக படையினர் தெரிவித்தனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## கிடங்கு நீரில் மூழ்கி
## 2 வயது குழந்தை பலி

(முல்லைத்தீவு)

கிடங்கு நீருக்குள் விழுந்த இரண்டு வயது குழந்தையொன்று மூச்சுத்திணறி பரிதாப கரமாக உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று காலை 8.30 மணி யளவில் முல்லைத்தீவு ஆனை விழுந் தான் பாடசாலை வீதியருகே உள்ள வீட்டில் இடம் பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த பாஸ்கரன் மிதுஜன் (வயது-2) என்ற குழந்தையே உயிரிழந் தாகும். இப்பரிதாபச்சம்பவம் தொடர் பில் மேலும் தெரிய வருவது,

குறித்த குழந்தை நேற்றுக்காலை விளையாடுவதற்காக வீட்டு முற்றத்து நிலத் தில் இறங்கியுள்ளது. இதே முற்றத்திலேயே குப்பை கொட்டுவதற்காக கிடங்கு ஒன்றும் வெட்டப்பட்டுள்ளது

துரதிர்ஷ்டவசமாக வெட்டப்பட்ட கிடங்கு மழை நீரினால் முழுவதும் நிரம்பிய நிலை யில் நில (19ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானுக்கான தேயிலை
## ஏற்றுமதி பாதிப்பு

(நியூயோர்க்)

ஐக்கிய அமெரிக்காவினால் ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடை காரண மாக இலங்கையிலிருந்து தேயிலை ஏற்று மதி செய்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது ஏற்றுமதி செய்யப்பட்ட தேயி லைத் தொகையினையும், அங்கு சந்தை யில் விநியோகிப்பதிலும் பல நெருக்கடி களிற்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாக இலங்கை ஏற்றுமதி முகவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# குற்றப் பிரேரணையில் கையெழுத்திடுவோர் அதிகார பகிர்விற்கு எதிரானவர்கள்

## பிரதம நீதியரசருக்கு ஆதரவாக மனோ குரல்



நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு திவிநெகும என்ற சட்டமூலத்தை அடிப்படையாக கொண்டது. இந்த சட்டமூலம் 13ஆம் திருத்தத்தை வலுவிழக்கச் செய்யும் நோக்கத்தை கொண்டது.

எனவே பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான அரசாங்கத்தின் குற்றப் பிரேரணையில் கையெழுத்து இடுகின்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிகார பகிர்விற்கு எதிரானவர்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த குற்றப் பிரேரணையில் இன்று (நேற்று) வரை சுமார் 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து இட்டுள்ளார்கள் என தெரிய வருகிறது. இந்த 120 பேரிலும் தொடர்ந்து கையெழுத்துப் போடப் போகின்றவர்களிலும் எத்தனை தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற போகின்றார்கள் என்று தமிழ் பேசும் மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இந்த குற்றப் பிரேரணையில் கைச்சாத்திடும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் மக்கள் மனதில் தமக்கு எதிராக தாமே குற்றப் பிரேரணையை நிறைவேற்றிக் கொள்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதில் இரண்டு கருத்துக்கு இடம் கிடையாது. பிரதம நீதியரசரை ஜனாதிபதி நியமிக்க முடியும். ஆனால் பதவி விலக்க முடியாது. அதனால் தான் இந்த குற்றப் பிரேரணை.

இதன் மூலம் அவரை பதவி விலகச் செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இந்த சிக்கல் அதிகார பகிர்வில் கை வைக்கும் சட்டமூலத்தில் ஆரம்பித்துள்ளது. இது தொடர்பான தீர்ப்பு சபாநாயகரிடம் நாளை கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தவழக்கின் ஒரு மனுதாரரான நான், நமது மனு மீதான விசாரணையின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கின்றேன். எது எப்படி இருந்தாலும், இந்த விவகாரம் தமிழ் பேசும் மக்களுக்கு மிகவும் முக்கியமானது. தமிழ் பேசும் மக்களுக்கே அதிகாரப் பகிர்வு அவசியப்படுகின்றது.

எனவே இந்த கட்டத்தில் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக கொண்டு வரப்படும் குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக கையெழுத்திடும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள். கையெழுத்துப் போடும் ஒவ்வொருவரையும் தமிழர்கள் தூர விலத்தி வைக்கவேண்டும். இந்தப் பிரேரணையில் தமிழ் உறுப்பினர்கள் கைச்சாத் திடுவது வரலாற்று துரோகமாகும் என மனோ கணேசன் தெரிவித்ததாக அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ந-11)

## குண்டு வெடித்ததில் சிறுவன் படுகாயம்

அக்கரைப்பற்று கண்ணகிபுரம் பகுதியில் மோட்டார்குண்டொன்று வெடித்ததில் 14 வயது சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில், படுகாயமடைந்த ரவிக்குமார் கௌரிகரன் என்ற சிறுவன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கண்ணகிபுரம் பிரதேசத்தில் மூடப்பட்ட விசேட அதிரடிப்படை முகாம் பகுதியில் குறித்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது அவ்விடத்தில் போத்தல் ஒன்று கிடப்பதை கண்ட அச்சிறுவன் அதனை எடுத்து எறிவதற்கு முயற்சித்துள்ளான். அதன்போதே இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

போத்தலில் அடைக்கப்பட்ட நிலையிலிருந்த டொம்பர் 4 ரக மோட்டார் குண்டே இதன்போது வெடித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அக்கரைப்பற்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-11)

# ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்பட்டது ஓர் இனப்படுகொலையே ஆகும்!

## பிரான்ஸ் பாராளுமன்றவளாகத்தில் கருத்து

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் மீது நடத்தப்பட்டது ஓர் இன அழிப்பே என பிரான்ஸின் முக்கியதொரு உயர்கல்வி மாணவ சமூகத்தின் கருத்துருவாக்கச் சிந்தனை மையமொன்று கருத்தினை வெளியிட்டுள்ளது.

அத்தோடு ஈழத் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை நோக்குவதாகவும் இந்த மையம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் தேசத்தின் உள்ளக விவகாரம் மற்றும் சர்வதேச விவகாரம் தொடர்பில் பிரான்ஸின் அரச மற்றும் அரசியல் உயர்மட்டங்களுக்கான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கி வருகின்ற உயர் கல்வியாளர்களை பிரதிநிதிகளாகக் கொண்ட கருத்துருவாக்கச் சிந்தனை மையமொன்று கடந்த சனிக்கிழமை பிரான்ஸ் பாராளுமன்ற வளாகக் கூடமொன்றில் கருத்தரங்கொன்றினை நடாத்தியிருந்தது.

சர்வதேச விவகாரம் தொடர்பில் இக்கருத்தரங்கில் பேசப்பட்டபோது, பிரான்ஸ் அரச மட்டம் எடுக்க வேண்டிய முக்கிய விடயங்களில் ஒன்றாக இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு நடந்தேறிவரும் கொடுமைகள் குறித்து காத்திரமான நிலைப்பாட்டினை எடுக்க வேண்டிய கட்டாயத்தினை வலியுறுத்தியிருந்தது. அத்தோடு தமிழர்கள் மீது நடந்திருப்பது ஓர் இனப்படுகொலை என்பதனை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பெரும் இன அழிப்பினை எதிர் கொண்டுவரும் தமிழர்களுக்கான, அரச பிரதிநிதித்துவமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை அங்கீகரித்துக் கொள்வதாகவும் இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

இச்சிந்தனை மையத்தின் 2013ஆம் ஆண்டுக்கான சர்வதேச விவகாரம் தொடர்பிலான பிரதானவேலைத்திட்டமாகதமிழர்கள் விவகாரமே உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டிருந்த இந்த நிகழ்வரங்கில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர் மகிந்தன் சிவசுப்பிரமணியம் தலைமையில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் பங்கெடுத்துக் கொண்டனர்.

பிரான்ஸ் உயர்கல்வி சமூகத்தின் முக்கியமானதொரு சிந்தனை மையம் ஒன்றிலிருந்து தமிழர்கள் தொடர்பில் இவ்வாறானதொரு கருத்து வெளிவந்திருப்பது மிகுந்த நம்பிக்கை தருவதாக உள்ளதென தெரிவித்துள்ள அமைச்சர் மகிந்தன் சிவசுப்பிரமணியம், தமிழர்கள் மீது நடந்தேறுவது ஓர் இனப்படுகொலை என்பதனை ஏற்றுக் கொண்டிருப்பதோடு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான வெளிப்படையான அங்கீகாரம் இதில் முக்கிய விடயங்களாக உள்ளதென தெரிவித்துள்ளார். (ந-11)

## 7 படகுகள் கடும் சேதம்

(யாழ்ப்பாணம்)

இன்பசிட்டியில் கரையை அண்டிய கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டு நின்ற படகுகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

இன்பசிட்டி கடற்தொழிலாளர் சங்கத்திற்கு உட்பட்ட 7 படகுகள் இவ்வாறு பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் இ. எமிலியாப்பிள்ளை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

குறித்த இறங்குதுறையில் 20 இற்கும் மேற்பட்ட படகுகள் நங்கூரமிட்டு நின்றன. இதில் 7 வள்ளங்கள் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளன. குறித்த இறங்கு துறையில் நங்கூரமிட்டிருந்த வள்ளங்கள் நேற்று முன்தினம் இரவு அடித்த கடுங்காற்றினால் ஒன்றோடொன்று மோதியதால் கடும்சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

மேலும் இக்காற்றின் அச்சுறுத்தலினால் மீனவர்கள் நேற்றைய தினம் தொழிலுக்கு செல்லவில்லை.

பாதிப்படைந்த மீனவர்கள் தொடர்பில் தாம் அக்கறை கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# பண்டார வன்னியன் நினைவு தினத்தில் மக்கள் வெளிநடப்பு

(பூந்தோட்டம்)

அடங்காப்பற்று வன்னியை ஆண்ட பண்டாரவன்னியன் நினைவு தினமான நேற்று நிகழ்வுகள் ஆரம்பித்தபோது மண்டபத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக பண்டார வன்னியன் அறங்காவற்குழுவும் சில பொது மக்களும் வெளிநடப்பு செய்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக தெரியவருவதாவது,

வவுனியா நகரசபையும் பண்டார வன்னியன் அறங்காவற் குழுவும் அரசியல் கலப்பின்றி அனைத்து இன, மத மக்களையும் ஒன்று திரட்டி பண்டாரவன்னியன் நினைவு தினத்தினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து நிகழ்வுகளை நடத்திய போது வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் வருகை தந்த சிலர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையில் இவ்விழா இடம்பெற வேண்டும் என்றும் அதுதொடர்பாக தாம் கொண்டு வந்த பதாகையை இடவேண்டும் எனவும் ஏற்பாட்டாளர்களுடன் முரண்பட்டனர்.

எனினும் பண்டாரவன்னியன் அறங்காவல் குழு அவ்வாறு பதாகை அமைக்கப்பட்டால் அரசியல் மயப்படுத்தப்பட்டுவிடும். எனவே அதனை தவிர்க்குமாறும் அவ்வாறு அமைத்தால் தாம் வெளியேறுவதாகவும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதாகை அமைக்கப்பட்டதை அடுத்து அறங்காவல் குழுவும் சில பொது மக்களும் தாம் அரசியல் கலப்புள்ள நிகழ்வில் பங்கேற்கமாட்டோம் என தெரிவித்து வெளியேறியிருந்தனர்.

எனினும் வவுனியா நகரசபையினர் சிறு தொகை மக்களுடன் நிகழ்வினை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-9,வே)


**செல்லா சினிமா- யாழ்ப்பாணம்**




10.30
2.30
6.30

D.TS

30.10.2012 முதல் A/C

**வீடு வாடகைக்கு உண்டு**

அரசடி வீதியில் மாடி வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். (தனியார் நிறுவனத்திற்கு மட்டும்)

தொடர்பு:-

282, அரசடி வீதி,
நல்லூர்.

072 2058854, 072 2928781

(870)


# அதிக அக்கறையை மாணவர்கள் கல்வியில்தான் காட்டவேண்டும்

## அறிவுரைக்கிறார் ஹத்துருசிங்க



(யாழ்ப்பாணம்)

சாதியோ, இனமோ நாட்டிற்கு தேவையில்லை. எனவே மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டி நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தின் சமூக நலத் திட்டத்தின் கீழ் யாழ். சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் வைத்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் கடந்த காலத்தில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் இருந்தன. அதனால் யுத்தம் இடம்பெற்றது.

அவ்வாறானதொரு சூழ்நிலை மீண்டும் இந்த நாட்டில் ஏற்பட அனுமதிக்கக் கூடாது. நாம் எல்லோரும் ஒரு நாட்டு மக்களாக வாழ வேண்டும்.

மத, இன, மொழி வேறுபாடுகள் எமக்குள் ஏற்படக்கூடாது. அவ்வாறு வேறுபாடுகள் ஏற்பட்டதனால்தான் கடந்த காலத்தில் நாம் நீண்ட தூரம் விலகிச் சென்றோம்.

எமது நாட்டில் வாழ்ந்த அறிஞர்கள், உலகத்தில் பெருமையுடன் வாழ்ந்த மனிதர்கள் பற்றி அறிந்து கொண்டு புதிய தலைமுறை வாழ பழகிக் கொள்ளவேண்டும்.

கல்வி அறிவுதான் ஒரு மனிதனுக்கு முக்கியமானது. அதனூடாகத்தான் நாட்டிற்கு பெருமை சேர்க்க முடியும். சாதியோ, இனமோ நாட்டிற்கு தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## சிவானந்தன் காலமானார்

வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவானந்தன் கனடாவில் காலமானார்.

யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் கனடாவிற்கு சென்றிருந்தவேளை திடீர் சுகவீனமுற்ற இவர் வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார்.

யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய சிவானந்தன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அவமதிப்பு

"நேற்றைய தினம் ஒருவன் என்னை அவமானமாக பேசிவிட்டான் சேர். என்னாலே அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இரவு பூராகவும் தூக்கம் வரவில்லை. மனதினுள் மிகவும் கஷ்டமாக உள்ளது" என்று ஒருவர் வருத்தப்பட்டு சொன்னார்.

இது அவருக்கு மட்டும் ஏற்படும் அனுபவம் இல்லை. எல்லோருக்குமே எப்போதாவது ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அவமதிப்பு ஏற்படத்தான் செய்கிறது.

அவமதிப்பு ஏற்பட்டால், உடனே நாம் மனதினுள் அதை நினைத்து நினைத்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், மகான்கள் அப்படி அவஸ்தைப்படுவதில்லை; அவமதிப்பினை அவர்கள் எடுத்துக்கொள்ளும் விதமே தனியாகும்.

புத்தர் ஒருநாள் கிராமத்து வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அந்த ஊர் மக்கள் அவரை திட்டித் தீர்த்தார்கள். அவரை அவமதித்தார்கள்.

அவர் அதைப்பொறுமையாக கேட்டுவிட்டு நீங்கள் இன்னமும் சொல்வதற்கு ஏதாவது ஆசைப்படுகிறீர்களா? ஏனென்றால் நான் அடுத்த கிராமத்திற்கு போக வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட நேரத்தினுள் அங்கே போய்ச்சேர வேண்டும்... எனக்காக பலபேர் காத்துக் கொண்டிருப்பார்கள். "நீங்கள் இன்னமும் என்னைப் பார்த்து ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், நான் இவ்வழியால் மறுபடியும் பயணிப்பேன். அப்போது சொல்லலாம்" என்றார்.

இவர் இவ்வாறு கூற, ஊர் மக்கள் யாவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

என்ன இது... நாம் இவரைத்திட்டினோம். அவர் இப்படி பதில் சொல்கிறாரே என்று யோசித்தார்கள்.

அவரிடம் நேரடியாக "என்ன சொல்கிறீர்கள். உங்களை நாங்கள் அவமானப்படுத்திக் கொண்டல்லவா இருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

புத்தர் சிரித்தார் "அது உங்களுக்குள்ள சுதந்திரம்... ஆனால், அதை ஏற்றுக்கொள்வதும்... ஏற்றுக் கொள்ளாததும் எனக்குள்ள சுதந்திரம்- இப்போது அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை" என்றார்

கிராமத்து மக்கள் ஆச்சரியமாக அவரை பார்த்தார்கள். புத்தர் மறுபடியும் பேச ஆரம்பித்தார்.

"இதோ பார்... உங்கள் கிராமத்திற்கு வருவதற்கு முன்பு நான் இன்னொரு கிராமம் வழியாக வந்து கொண்டிருந்தேன்... அந்த ஊர் மக்கள் எனக்கு இனிப்பு வகைகளை வழங்கி மகிழ்ந்தார்கள். "உங்கள் அன்பிற்கு நன்றி... நான் இனிப்பு சாப்பிடுவதில்லை. அதனால் வேண்டாம்" என்று அவர்களிடம் கூறினேன்.

அதன்பின் அந்த இனிப்புகளை அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? என்று கேட்டார்.

அக்கூட்டத்தில் இருந்து ஒருவர் "அவர்கள் திருப்பி அவர் அவர் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள்" என்றார்.

"அப்படியேதான் இப்போதும் நீங்கள் செய்யப் போகிறீர்கள். எனக்கு நீங்கள் ஏற்படுத்திய அவமானங்களை திரும்ப உங்களது வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டியதுதான்.

ஏனென்றால்.....நான் உங்களது அவமதிப்புக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் வேறுவழியில்லை எடுத்துக்கொள்ளுங்கள் என்று புத்தர் கூறினார்.

அப்போது அந்த கிராமத்து மக்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். அவமதிப்புகளை பெரியவர்கள் எதிர்கொண்ட முறை இது! நாம் அப்படியாக இருக்கிறோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு இராணுவம் உதவி புரிந்து வருகிறது

## யாழ். அரச அதிபர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினர் பொதுமக்களுக்கு அளப்பரிய சேவையினைச் செய்து வருகின்றனர். இதுவரை 25 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அதில் இரண்டாயிரம் வீடுகளை இராணுவத்தினரே அமைத்துக் கொடுத்துள்ளனர் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைகளின் தலைமையத்தின் சமூக நலத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் நேற்று யாழ்.சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் வைத்து பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் பல வருடங்களாக இடைவெளி இருந்துள்ளது.

இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது. நீண்டகால அழிவிற்கு பின்பு பல அபிவிருத்திப் பணிகள் யாழ்.மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தோடு மாணவச் செல்வங்களின் கல்வியை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடனும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கும் மாணவச் செல்வங்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னேற்றவும் இராணுவத்தினர் பல உதவிகளைச் செய்து வருகின்றனர்.

பல அழிவுகளை எதிர்கொண்ட நிலையில் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறி வரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு இதுவரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளை இராணுவத்தினர் தாமாக முன்வந்து அமைத்துக் கொடுத்துள்ளனர்.

சிவில் நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுகின்றனர். மக்கள் மீள்குடியேற்றப்படும் பகுதிகளில் தம்மிடமுள்ள இயந்திரங்களின் துணையுடன் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மக்களை மீள்குடியேற்றுவதற்கு பல வழிகளிலும் உதவி வருகின்றனர்.

எனவே, இராணுவத்தினர் போன்று நிர்வாகத்துடன் இணைந்து சிவில் கட்டமைப்பை ஏற்படுத்த அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், படைத்தரப்பினர் சிவில் நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக எமது பிரதேசத்தை விரைவாக அபிவிருத்தி செய்ய முடியும்.

அத்தோடு மாணவர்களுக்கு இவ்வாறான உதவிகள் வழங்கப்படுவதன் ஊடாக கல்விச் செயற்பாடுகளை உத்வேகத்துடன் அவர்களினால் முன்னெடுத்து செல்ல முடியும்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த யுத்த காலத்திலிருந்ததை விட தற்போது கல்வித் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனை இன்னும் முன்னேற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 75 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 100 | 105 |
| பச்சைமிளகாய் | 100 | 190 | 70 | 150 |
| தக்காளி | 100 | 100 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 40 | 30 | 40 |
| கோவா | 120 | 110 | 60 | 90 |
| கரட் | 110 | 100 | 70 | 200 |
| பூசணி | 80 | 50 | 35 | 50 |
| புடோல் | 50 | 90 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 40 | 60 |
| சின்ன் வெங்காயம் | 70 | 60 | 45 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 40 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 180 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 110 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 110 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 80 | 120 | 30 | 60 |
| போஞ்சி | 120 | 180 | 80 | 200 |
| கத்தரிதம்புள்ள | 90 | 80 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 280 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35 | 30-35 |

## இராசி பலன்

01.11.2012
(ஐப்பசி 16, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திருதியை முழுவதும்
கார்த்திகை காலை 8.15 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை

**மேடம்** இனிமையான செய்திகள் வந்து சேரும் நாள், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** பிற இனத்தவரால் பெருமை சேர வேண்டிய நாள், தொழில் நலன் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன நன்மையுண்டு.

**மிதுனம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடுதல் பொறுப்புகள் வந்து சேரலாம், புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம்.

**கடகம்** அதிர்ஷ்டகரமான நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

**சிங்கம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், திடீர் பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**துலாம்** கௌரவக்குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம், வேலைச்சுமை கூடும், சேமிப்புக்கள் கரையக்கூடிய நிலை ஏற்படும், மனதில் கவலைகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்** சுப தகவல்கள் வந்து சேரலாம், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடம் வந்து சேரலாம், யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், கௌரவமான நாள்.

**தனுசு** எடுத்த முயற்சிகள் கைகூடும், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், கடன் பிரச்சினைகளை மாற்றியமைப்பீர்கள், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முன்வருவீர்கள்.

**மகரம்** புத்திரர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பிறருக்கு உதவும் சிந்தனை உருவாகும், சிறுசிறு வருமானங்கள் வந்து சேரலாம், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தாய்வழி ஆதரவு பெருகும், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் மேலோங்கும், போசன சுகமுண்டு.

**மீனம்** இழுபறியாக இருந்த பிரச்சினைகளில் வெற்றி கிடைக்கும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர், சகோதர ஒற்றுமை பலப்படும், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் தத்தளிக்கிறது நாகர்கோவில் பிரதேசம்

(கரவெட்டி)


வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாகர்கோவில் கிழக்கு, மேற்கு கிராமங்கள் முற்றாக வெள்ள நீரில் மூழ்கியதால் அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள தமது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். ஏனையோர் தமது வீடுகளில் உள்ள உயரமான இடங்களில் தங்கியுள்ளதாக அப்பகுதியில் இருந்து வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பிரதேசம் சுனாமி அனர்த்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் மழை வெள்ளமும் அம்மக்களை விட்டு வைக்கவில்லை.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அப்பிரதேசத்தில் 400 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது வரை இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச அதிகாரிகளோ அரச சார்பற்ற நிறுவனங்களோ இதுவரை எதுவிதமான உதவிகளையும் வழங்கவில்லை என அம்மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ-3-24)



நன்றி:- மிரர். 31/10/12

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஐப்பசி மாத ஞானச்சுடர் நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலானது கந்தரநுபூதி, ஸ்ரீரமண நினைவலைகள், சிறுவர் கதைகள், தாய் சொல்லைத் தட்டாதே, பெண் எனும் மகா சக்தி, மனித நல மேம்பாட்டினை மையப் படுத்திய சித்தர் இலக்கியங்கள், படங்கள் தரும் பதிவுகள் என்பவற்றை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. (அ-9)




# இராமநாதன் வீதியை புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு இராமநாதன் வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு யாழ்.மாநகரசபையிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பிரதான வீதிகளைப் புனரமைப்பு செய்வதன் ஊடாக அபிவிருத்திப் பணிகளைச் செய்வதாக வெளிக்காட்டிக் கொள்பவர்கள் கிராம மட்டத்தில் எந்தவித அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்வதில்லை எனவும் குற்றம் சுமத்தப்படுகிறது.

குறித்த வீதியானது மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதனால் அப் பகுதியில் உள்ள மகேஸ்வரி வித்தியாலயத்திற்கு செல்லும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர். (அ-6)

## பழந்தமிழர் இயக்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

பழந்தமிழர் இயக்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கான பழந்தமிழரின் தொன்மையும் **வரலாறும்** எனும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இவ் ஆய்வுக்கட்டுரைகளை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் ம.வித்தியானந்த நேசன், நிறுவுநர் பழந்தமிழர் இயக்கம், இல.07, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்விழா தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 7642379 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-9)

## மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

(துனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபாலா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா, இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி உதவி இயக்குநர் அருட்தந்தை ரி.ஏ. றெஜிக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-37)

# செல்வாபுரத்துக்கு குடிநீர் வழங்கும் திட்டம்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் செல்வாபுரம் கிராமத்திற்கு நீர் வழங்கல் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கரவெட்டி பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது.

இக்கிராமத்தில் குடிநீர்ப்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்தது. குடிநீர் இன்றி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இவர்களின் அவலநிலையை கருத்திற் கொண்டு இச்சேவைத்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது. இதனால் அம்மக்களது குடிநீர்த் தேவை மிகவிரைவில் பூர்த்தியாக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-10)

# குப்பைகளை அகற்றுவதில் பரு.நகரசபை அசமந்தம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட வீதிகள் மற்றும் வீடுகளில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளால் பல்வேறு வகையான தொற்றுநோய் பரவும் நிலை காணப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தை அடுத்து மழை பெய்து வருகின்ற வேளை குப்பைகள் அப்புறப்படுத்தப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

பருத்தித்துறை நகர சபையினர் குப்பைகளை அப்புறப்படுத்துவதில் தாமதம் காட்டி வருவதனால் மக்கள் நோய்களுக்கு இலக்காகலாம் என அஞ்சப்படுகின்றது.

இதேவேளை, பொலிஸாரின் உதவியுடன் சுகாதாரப் பகுதியினர் இப்பிரிவில் உள்ள வீடுகள் தோறும் சுகாதார நிலைமைகளை பார்வையிட்டு செல்வதும் குறிப்பிடத்தக்கது. (அ-3-10)

## அங்கவீனம் உற்றவர்களுக்கு வீடமைப்பதற்கு உதவி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் அங்கவீனம் உற்றவர்களுக்கு வீடமைப்பு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கான 2 ஆம் கட்ட கொடுப்பனவு தொகை சாவகச்சேரி சமூக சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

சரசாலை தெற்கைச் சேர்ந்த நடராஜா சந்திரலேகா எனும் பயனாளி தனக்குரிய 2 ஆம் கட்ட கொடுப்பனவு தொகையை இன்று வியாழக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)



யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் சமூக நலத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணம் சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் வைத்து பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் மாணவர்களுக்கான பரிசில்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய மாணவர்களுக்காக விஞ்ஞான கல்வி நிலையம்

## கிளிநொச்சியில் உதயம்

(சிவநகர்)

கிளிநொச்சியில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இயங்காதிருந்த விஞ்ஞான கல்வி நிலையம் மீண்டும் விஜயதசமி தினத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இவ் விஞ்ஞான கல்வி நிலையம் வவுனியா மாவட்ட வைத்திய பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி தலைமையில் ஆரம்பீக்கப்பட்டுள்ளது.கல்வி அறக்கட்டளை ஊடாக கிணறு, புதிய கட்டடங்கள்அமைக்கப்பட்டு இக்கல்வி நிலையம் தனது சேவையை ஆரம்பித்துள்ளது. இந்நிகழ்வில் இக்கல்லூரியின் பழைய மாணவர்களாக இருந்து தற்போது பல பாடசாலைகளில் அதிபர்களாகவும் வைத்தியர்களாகவும் உள்ளவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர், கியூடெக் நிறுவன பொறுப்பாளர் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இக்கல்வி நிலையத்தில் கணனிகற்கை நெறி ஆங்கிலக் கற்கை நெறி, இசை கற்கைநெறி என்பன எதிர்காலத்தில் நடத்துவதற்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது தரம் 11 வரை இயங்கிவரும் இக்கல்வி நிறுவனம் வறிய மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குவதையே நோக்கமாகக் கொண்டது. (அ-3-254)

# வடக்கு மாகாணத்தில் ஆளுநர் விருது வழங்கல்

(பூந்தோட்டம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடம் தோறும் வழங்கப்படும் ஆளுநர் விருது இம்முறை வவுனியாவைச் சேர்ந்த 4 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

கலாபூஷணம் ம.பொ.தைரியநாதன் (இசை நாடகம்), கலாபூஷணம் க.கனகேஸ்வரன் (மிருதங்கம்),, கலாபூஷணம் மனிக்கு பதுகே குணதிலக (மரச்சிற்பம்), கலாபூஷ ணம் மொகமட் அலியார் மொகமட் சரீப் (பாரம்பரிய மருத்துவம்) ஆகியோருக்கே இவ் விருதுகள் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் ஏனைய மாவட்டங்களில் ஆளுநர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம்:-

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

ஏ. பேர்க்மன் ஜெயராசா (இசை நாடகம்), பண்டிதர் எம்.கே.கடம்பேஸ்வரன் (இலக்கியம்), புலவர் ம. பார்வதி நாதசிவம் (கவிதை), வல்லிபுரம் செல்லத்துரை (சங்கீதம்), செல்லத்துரை ராசா (மோர்சிஸ்)

**மன்னார் மாவட்டம்**

சந்தியா அந்தோனி மார்ன்ட்(நாடகம்)

**கிளிநொச்சி மாவட்டம்**

தங்கரட்ணராசா ஜெகநாதன் (இலக்கியம்)

**முல்லைத்தீவு**

திருமதி மயில்வாகனம் தவமணி (நாடகம்)

இவர்களுக்கான விருதுகள் வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள வடமாகாண இலக்கிய பெருவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-2-266)

# ஓமான் வெளிவிவகார அமைச்சர் யூசுப் வருகை

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஓமான் வெளிவிவகார அமைச்சர் யூசுப் பின் அலவி பின் அப்துல்லாஹ் நேற்றைய தினம் இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே அவர் இலங்கை வருகை தந்துள்ளார்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் ஓமான் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட பலரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதில அமுனுகம ஆகியோர் ஓமான் வெளிவிவகார அமைச்சரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வரவேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## நீடூழி வாழ மனதார வாழ்த்துகிறோம்...



ஸ்ரீதரன் சுகன்யா

நித்தம் கடல் முத்தம் தரும் வல்வை நகரண்டிய வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் தனில் அகரம் தொட்டு அறிவை வளர்த்து கொடும்போரினால் அண்ணாவின் நிலை தெரியாது தடுமாறிய நிலையிலும் அன்புக் குடும்பத்தின் ஆக்கமிகு முயற்சியாலும் பாடசாலைச் சமூகத்தின் அயரா உழைப்பினாலும் தனக்கே உரித்தான தனித்திறமையாலும் ஈழமெங்கும் 2012 இல் நடந்தேறிய ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் 150 புள்ளிகள் பெற்ற எம் அன்புச் செல்வத்தை எதிர்காலத்திலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- விநாயகர் வித்தியாலய பழைய மாணவி, காருண்யா அக்கா, Banker மாமா குடும்பத்தினர், முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

(அ/1412)

## போலி நாணயத்தாள்களுடன் அறுவர் கைது

ஐந்தரை இலட்சத்திற்கும் அதிக பெறுமதியுள்ள போலி ஆயிரம் ரூபா நாணயத்தாளுடன் ஆறு சந்தேக நபர்கள் ஹீங்கம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாணயத்தாள் அச்சிடுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

ஹொரணையில் குறித்த நாணயத்தாள்களை அச்சிட்ட சந்தேகநபர்கள் அவற்றை மாற்றுவதற்காக வேறொரு பகுதிக்கு சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (அ-2)


**YARL Properties**

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com


# தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரை 2013 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் அழைப்பாணை பிறப்பித்தார்.

தேசிய லொத்தர் சபைக்கு ஆலோசகராக ஒரு வரி ஆலோசகரை நியமித்ததனால் லொத்தர் சபைக்கு 9 இலட்சத்து 826 ஆயிரத்து 175 ரூபா இழப்புக்கு காரணமாக இருந்தார் என முன்னாள் தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் அஹமது இம்தியாஸ் இஸ்மாயில் இலஞ்ச சட்டத்தின் பிரிவு 70 இன் கீழ் தண்டனைக்குரிய ஊழல் ஒன்றை புரிந்துள்ளதாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அறிக்கையொன்றை தாக்கல் செய்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு 22 தடயப் பொருட்களையும் 7 சாட்சிகளையும் ஆதாரமாக சமர்ப்பித்திருந்தது.

ஆணைக்குழுவின் இந்த அறிக்கையை ஆராய்ந்த கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி, அஹமத் இம்தியாஸ் இஸ்மாயில் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மே 3 இல் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென அழைப்பாணை பிறப்பித்தார். (அ-2)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1980 (R.C)<br>நட்சத்திரம்:-உத்தராடம் 1<br>உயரம்:-5'7"<br>தொழில்/தகைமை:-அரச கட்டட ஒப்பந்தகாரர்<br>B/649 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 2<br>உயரம்: 5'3'<br>தொழில்/தகைமை:-கலாநிதி பட்டம் பெற்றவர்<br>G/650 |
| பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:-ஆயிலியம் 3<br>உயரம்:-5'4"<br>கி.பா:-55<br>தொழில்/தகைமை:-Bsc ஆசிரியர்<br>B/553 | பிறப்பு:- 1990 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- புனர்பூசம்<br>உயரம்: 5'3"<br>தொழில்:-தையல்<br>G/651 |
| பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-புனர்பூசம்<br>உயரம்:-5'5"<br>கி.பா:-36.75<br>தொழில்/தகைமை:-computer programmer U.K) விவாகமானவர்<br>B/544 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூராடம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-68.25<br>தொழில்/தகைமை:-A/L maths Bsc (open university)<br>G/278 |
| பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 2<br>உயரம்:-5'10"<br>கி.பா:-22<br>தொழில்/தகைமை:-அரச நிதி நிறுவனம்<br>எதிர்பார்ப்பு:-சைவ உணவு மாத்திரம்<br>B/558 | பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 1<br>உயரம்: 5'2"<br>கி.பா:-32.5<br>தொழில்/தகைமை:-(HNDA)<br>G/279 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**


(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கு பிரகாசமான எதிர்காலம்

## 19 விரிவாக்கற் காரியாலயங்கள் கிளைகளாக தரமுயர்த்தப்பட்டு நொவம்பர் மாதத்தில் திறந்து வைக்கப்படும்.




*வாருங்கள், எம்முடன் வைப்புச் செய்யுங்கள்!*

591 கிளைகள்/விரிவாக்கற் காரியாலயம் | 436 ATMகள் | 857 வெளிநாட்டு தொடர்பிலான நிலையங்கள் | 24 x 365 தலைமை அலுவலகக் கிளை | 24 x 7 அழைப்பு நிலையம் | நடமாடும் தொலைபேசி வங்கிச் சேவை | இணையதள வங்கிச் சேவை | SMS எச்சரிக்கை சேவை | SME நிலையங்கள் | முதன்மை நிலையம்

www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01

அழைப்பு நிலையம்
(+94) 011 220 4444

Fitch Rating
AA+ (lka)

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது குறித்து தெரிவுக்குழுவே தீர்மானிக்கும்

## இதற்காக ரணிலை உழைக்க கோருகிறார் அஸ்வர் எம்.பி.

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நீக்குவதா? அல்லது இல்லையா என்பது பற்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்டு தீர்வொன்றைக் காணவேண்டும் என்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியுடன் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றம் சென்று 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் எழுப்பிய விடயங்கள் மற்றும் இந்தியாவுக்குச் சென்று தெரிவித்த கருத்துக்கள் சம்பந்தனின் எழுந்தமானமான முடிவுகளாலேயே இந்தப் பிரச்சினை தற்பொழுது சிக்கலாகியுள்ளது.

இதனாலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் தனித்தனி மாற்றுக் கருத்துக்களைத் தெரிவித்து வருவதோடு குழப்பநிலையொன்று உருவாகியுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சகல கட்சிகளும் சந்தித்து இவ்விடயத்தில் உறுதியான முடிவொன்றை எடுப்பதன் மூலமே இதற்குத் தீர்வொன்றைக் காணமுடியும்.

தெரிவுக்குழு தொடர்பில் சம்பந்தன் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கூறி அக்குழுவில் கலந்து கொள்வதை இழுத்தடித்து வருகிறார். சமஷ்டி மூலம் நிர்வாகத்தை உருவாக்கும் ஒரு தந்திர முயற்சியாகவே இதனை நாம் கருத வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இவ்வாறான விடயங்களைத் தவிர்த்து தெரிவுக் குழுவில் பங்கெடுப்பதை இழுத்தடிக்காமல் உடனடியாகக் கலந்து கொள்ள முன்வர வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமின்றி ஏனைய கட்சிகளும் தெரிவுக் குழுவில் பங்கெடுத்து 13 ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து ஆக்கபூர்வமான தீர்வொன்றைக் காண வேண்டும் என்பதில் ஜனாதிபதி அக்கறையுடன் இருக்கிறார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுக் குழுவுக்கு கொண்டு வருவதில் பேச்சுவார்த்தை நடத்துவதாக ஏற்கனவே கூறியுள்ளார். இது வரவேற்கக் கூடிய விடயம். ரணில் விக்ரமசிங்க தான் கூறியதைப் போன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பித்து அவர்களைத் தெரிவுக்குழுவிற்கு அழைத்து வரவேண்டிய அவசியம் இருக்கிறது.

இந்த இவ்விடயத்தில் ரணில் விக்ரமசிங்க நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# தக்கியா பள்ளிவாசலுக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு

அநுராதபுரம் மல்வத்து லேன் பகுதியில் இனந்தெரியாதவர்களினால் தீ மூட்டி எரிக்கப்பட்ட மத்ரஸாவுடனான தக்கியா பள்ளிவாசலின் பாதுகாப்புக்கென 24 மணிநேரமும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை அதிகாலை வேளையில் தக்கியா பள்ளிவாசல் தீ மூட்டிக் கொளுத்தப்பட்டது.

தக்கியா பள்ளிவாசல் மீது தீ மூட்டியதை கேள்விப்பட்ட அதிகாரிகள், நலன் விரும்பிகள், அரசியல் தலைவர்கள் போனறோர் தக்கியா பள்ளிவாசலுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றி கண்டறிய இப்பகுதிக்கு தொடர்ந்தும் வந்த வண்ணமுள்ளனர்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் உள்ளிட்டவர்கள் இப்பகுதிக்கு வந்து பாதிக்கப்பட்ட பள்ளிவாசலை பார்வையிட்டதுடன் மீண்டும் இதனைப் புனரமைத்து சமயக் கடமைகளை நிறைவேற்றுமாறும் இதற்காக தம்மால் முடியுமான உதவிகளைச் செய்வதாகவும் கூறிச் சென்றனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.11 01

- ★1520-தென் அமெரிக்காவில் மகலன் நீரிணை மகலனால் கண்டுபிடிக்கப்பட்டது.
- ★1592-கொரியக் கடற்படையினர் பூசான் என்ற இடத்தில் மிகப்பெரும் ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- ★1604-ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- ★1611-ஷேக்ஸ்பியரின் த டெம்பெஸ்ட் நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- ★1755-போர்த்துக்கல் லிஸ்பன் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக 60 ஆயிரம் தொடக்கம் 90 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.
- ★1805-முதலாம் நெப்போலியன் ஆஸ்திரியாவை முற்றுகையிட்டான்.
- ★1814- பிரான்ஸ் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐரோப்பாவின் எல்லைகளை மீளவரையும் பொருட்டு வியென்னா காங்கிரஸ் கூடியது.
- ★1876-நியூசிலாந்தின் மாகாண சபைகள் கலைக்கப்பட்டன.
- ★1894-ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டர் உயிரிழந்ததை அடுத்து இரண்டாம் நிக்கலாஸ் மன்னனானான்.
- ★1904-இலங்கையின் வட மாகாணத்துக்கான தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது அநுராதபுரம் வரை சேவையில் ஈடுபட்டது.
- ★1911-இத்தாலிக்கும் துருக்கிக்கும் இடையில் இடம்பெற்ற போரில் முதற்தடவையாக விமானத்தில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன.
- ★1914-முதலாம் உலகப் போர்: சிலியில் ஜேர்மனியக் கடற்படையுடன் நடந்த மோதலில் பிரித்தானியக் கடற்படையினர் முதன் முதலில் தோல்வியடைந்தனர்.
- ★1918-மேற்கு உக்ரேன் ஆஸ்திரிய- ஹங்கேரிப் பேரரசிடம் இருந்து விடுதலை பெற்றது.
- ★1922-ஒட்டோமான் பேரரசின் கடைசி சுல்தான் ஆறாம் மெகமெட் பதவியிழந்தான்.
- ★1928-துருக்கிய மொழி சீர்திருத்தம் ஏற்பட்டது. அரபு எழுத்துக்கள் புதிய துருக்கிய எழுத்துக்களாக மாற்றப்பட்டன.
- ★1948-சீனாவின் மஞ்சூரியா என்ற இடத்தில் சீனக் கப்பல் வெடித்து மூழ்கியதில் 6 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- ★1950-புவேட்டோ ரிக்கோ தேசியவாதிகள் அமெரிக்கத் தலைவர் ஹரிட்ருமனை கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.
- ★1951-நெவாடாவில் அணுகுண்டு வெடிப்புச் சோதனையில் அமெரிக்கப் படைகள் ஈடுபடுத்தப்பட்டன.
- ★1945-புதுச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று இந்தியாவுடன் இணைந்தது.
- ★1956-நிசாம் என அழைக்கப்பட்ட பகுதி ஆந்திரப் பிரதேசம் என்ற மாநிலமாக்கப்பட்டது.
- ★1956-இந்தியாவில் மைசூர், கேரளம், மதராஸ் ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.
- ★1956-இந்தியாவில் கன்னியாக்குமரி பிரதேசம் கேரள மாநிலத்தில் இருந்து பிரிந்து தமிழ்நாடு மாநிலத்துடன் புதிய மாவட்டமாக இணைந்தது.
- ★1957-அக்காலத்தில் உலகின் மிக நீளமான தொங்கு பாலமான மக்கினா பாலம் மிச்சிக்கன் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- ★1970- பிரான்சில் நடன மாளிகை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 144 பேர் உயிரிழந்தனர்.
- ★1973-மைசூர் மாநிலம் கர்நாடகா என மாற்றப்பட்டது.
- ★1981-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து அன்டிகுவா பர்புடா விடுதலை பெற்றது.
- ★1993-ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.
- ★1998-மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- ★1762-ஸ்பென்சர் பேர்சிவல், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (இ.1812)
- ★1973-ஐஸ்வர்யா ராய், இந்தியத் திரைப்பட நடிகை

**இறப்புக்கள்**

- ★1956-தியாகராஜ பாகவதர், தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (பி.1910)
- ★1996-ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்த்தனா, இலங்கையின் முதலாவது ஜனாதிபதி (பி.1906)

# வீதி அபிவிருத்திகளுக்காக சவுதி 60 மில்லியன் டொலர் வழங்கியது

(கொழும்பு)

வீதி அபிவிருத்திக்காக சவுதி அரேபிய அரசாங்கம் இலங்கைக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை சவுதி அரேபிய அரசாங்கம் இலங்கையில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்காக வழங்கியுள்ளது.

சவுதி அரேபிய நிதி அமைச்சரும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் தலைவருமான பேராசிரியர் இப்றாகிம் அல் அசாபின் இலங்கை விஜயத்தின் ஊடாகவே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அரேபிய நிதி அமைச்சர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் மாலை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போதே இந்நிதியுதவி தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதில் சவுதி அரேபிய நிதி அமைச்சரும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பணிப்பாளர் சபையின் தலைவருமான பேராசிரியர் இப்றாகிம் அல் அசாப் மற்றும் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் றிசாத் பதியுதீன், பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல, இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர், திறைசேரி செயலாளர் பீ.பீ.ஜயசுந்தர உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ-2)

# கட்டுரைப் போட்டி நாளை மறுதினம்

யாழ். மாநகரசபையின் கலாசாரப் பிரிவினால் ஒளிவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார். (அ-2)

# இரு வாரங்களில் வெட்டுப்புள்ளிகள்

பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் இன்னும் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என்று உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உளச்சார்பு பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் காலதாமதமின்றி விரைவாக வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்று மேற்படி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வை விரைவுபடுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுப்பதாக நாம் உணரவில்லை என்றும் இந்தியா இப்போது பின்னால் உள்ளது என்றும் இலங்கையின் வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ப்ரொன்ட்லைன் இதழுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

கடந்த மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வழங்கிய வாக்கு எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்பதை மறுக்க முடியாது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் ஆட்டத்தையே மாற்றக்கூடிய நிலையில் இந்தியா இருந்தது.ஆனால் இப்போது இந்தியா எமக்குப் பின்னால் உள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. இருநாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமானது என்று இந்தியாவைப் போலவே நாமும் புரிந்து கொண்டுள்ளோம்.ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர் குறுகிய காலத்தில் ஆறு இந்திய அமைச்சர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்துமாறு இந்தியா அழுத்தம் எதுவும் கொடுப்பதாக நாம் உணரவில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புவதாக அவர்கள் கூறுகின்றனர்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மையத்தில் வைப்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இல்லாத தீர்வு மணமகள் இல்லாத திருமணம் போன்றது

## அரியம் எம்.பி தெரிவிப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு பேசாவிட்டாலும் தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்குவோம் என அரசாங்கம் கூறி வருகின்றது.அப்படி தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு பேசாது எம்மை ஒதுக்கி விட்டு தீர்வு கொடுப்பது என்பது மணமகள் இல்லாத திருமணம் போன்றுதான் இருக்கும்.

அரசோடு பேசுவதற்கு நாம் இப்போது தயாராகவே உள்ளோம். ஆனால் அரசுதான் எம்மை பேச்சுக்கு அழைக்காமல் ஏமாற்றி வருகின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இல்லாவிட்டாலும் வழங்குவோம் என அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களும் அரசும் கூறி வருவது தொடர்பாக கருத்து தெரிவித்த போது அவர் அவ்வாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே உள்ளது. இதனைத் தமிழ்மக்கள் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களிலும் பல்வேறு செயற்பாடுகள் மூலமும் நிரூபித்துள்ளனர்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்மை ஒதுக்கிவிட்டு தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்க முடியாது என்றார். (அ-2)

# போர்க்குற்ற விசாரணைக்கு ஐ.தே.கட்சி ஆதரவு வழங்காது

## ஹரின் பெர்ணாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க் குற்றச்செயல் குற்றச்சாட்டுக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவு அளிக்காது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ள ஹரின் பெர்ணாண்டோ ஊடக மொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைப் படையினருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிரான போர்க் குற்றச்செயல் குற்றச்சாட்டுகளுக்கு கட்சி ஆதரவு அளிக்காது.

யார் என்ன சொன்னாலும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை.அவ்வாறான குற்றச்சாட்டுக்களை கட்சி ஏற்றுக் கொள்ளாது.

போரின் போது எமது பக்கத்திலும் புலிகளின் பக்கத்திலும் குற்றச்செயல்கள் இடம் பெற்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் பாரியளவில் குற்றச்செயல்களில் ஈடுபட்டனர்.தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்ற போதிலும் அது சர்வதேசத்தின் தலையீட்டின் அடிப்படையில் இருக்கக்கூடாது என்றார்.(அ-2)

# மிளகாய் தேவையை பூர்த்தி செய்ய 500 ஹெக்ரயரில் மிளகாய் செய்கை

மத்திய மாகாணத்தின் மிளகாய்ச் செய்கைக்கு பிரசித்தி பெற்ற மாத்தளை மாவட்டத்தில் புதிதாக மேலும் 500 ஹெக்டெயர் நிலப்பிரப்பில மிளகாயைப் பயிர் செய்யவும் அதனை செத்தல் மிளகாயாக பக்குவப்படுத்தி சந்தைக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட செயலாளர் ஹெலன் ஏ.மீகஸ் முல்ல தெரிவித்தார்.

நாட்டின் வருடாந்த சுயதேவைக்காக 40 ஆயிரம் மெற்றிக்தொன் செத்தல் மிளகாய் அவசியமான போதிலும் 6 ஆயிரம் மெற்றிக் தொன் மாத்திரமே தற்போது இருப்பதாக தெரிவித்த அவர் மிகுதி 34 ஆயிரம் மெற்றிக்தொன் மிளகாயையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் உள்ளோம் எனவும் கூறினார்.

இறக்குமதிக்கு செலவாகும் பெருந்தொகைப் பணத்தின் ஒரு பகுதியையாவது மீதப்படுத்துவதைப் குறிக்கோளாக கொண்டே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்கென விவசாய அமைச்சு 47 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே தம்புள்ள, கலேவெல, பள்ளேபொல, நாவுல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் இதற்கான விதைகள் இலவசமாக வழங்கப்படுவதோடு உற்பத்தி செலவின் 50 சதவீதத்தையும் அரசு வழங்க முன்வந்துள்ளதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார். (அ-2)

# பாரதவின் கொலை வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் படுகொலை தொடர்பான வழக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன த அல்விஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அது ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆர்.காமினி சார்பில் மன்றில் ஆஜரான வழக்குரைஞர் ஜகத் அபேநாயக்க, நீதிமன்றத்திற்கு வெளியே துமிந்த சில்வாவின் வழக்குரைஞர் ஹேமந்த வர்ணகுலசூரிய ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து 20 ஆவது சந்தேகநபரான தனது கட்சிக்காரரை மிகவும் பாதித்துள்ளது என கூறியுள்ளார் (அ-2)

# ஐ.தே.க.எம்.பி.க்கள் மூவருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை


## செயற்குழு தீர்மானித்தது

ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு செயற்குழு தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, பாலித்த தேவாரப்பெரும, அசோக அபேசிங்க ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தலைமையில் ஒக்டோபர் 18 ஆம் திகதி நடை பெற்றகூட்டத்தில் பங்குபற்ற வேண்டாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அக்கூட்டத்தில் பங்கேற்றமை தொடர்பிலேயே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களான மைத்திரி குணரத்ன ஸ்ரீலால் லக்திலக்க ஆகியோருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என ஐ.தே.க செயற்குழுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று கூடியதுடன் ஒழுக்காற்றுக்குழு முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் கூடும். (அ-2)





வடமாகாணத்தில் ஜிஐஇசற் (GIZ) நிறுவனத்தின் வெட்ரா திட்டத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண பிரதம செயலாளரின் செயலகத்தில் நடைபெற்றது. இதில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலக்சுமி ஜிஐஇசற் பிரிவின் தலைவர் தோமஸ் பிலின் கொண்ட குழுவினருடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு


88

# கோட்டை இராஜதானியும் கண்டி இராஜதானியும்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா


**கண்டி இராச்சியம்**

ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் கோட்டை இராச்சியத்திற்குரியதாக கண்டிப்பிரதேசம் இருந்ததால், அதன் பிரதிநிதியாக ஜோதிய என்பவன் விளங்கினான். பராக்கிரமபாகுவிற்கு எதிராக புரட்சி நடந்தபோது அதனை அடக்கிய பராக்கிரமபாகு கண்டிப் பிரதேசத்திற்கு கம்பளை அரச பரம்பரையைச் சேர்ந்த சேனாசம்மத என்பானை நியமித்தான். கோட்டை இராச்சியத்தின் நிர்வாகம் சீர்குலைந்தபோது, சேனாசம்மத சுதந்திர அரசாகக் கண்டியை பிரகடனப்படுத்திக் கொண்டான். தன் பெயரை விக்கிரமபாகு என அழைத்துக்கொண்டான். எனவே 16 ஆம் நூற்றாண்டில் கம்பளை அரச பரம்பரையைச் சேர்ந்த சேனாசம்மத விக்கிரமபாகு (1469-1511) என்பான் கண்டி இராச்சியத்தின் அரசனாக இருந்தான். அவன் செங்கடகல (கண்டி) என்ற நகரை தலைநகரமாகக் கொண்டிருந்தான். ஹரிஸ்பத்துவ உடுநுவர யட்டிநுவர, ஹேவாஹெட்ட, துபம்பறை ஆகிய ஐந்து பிரதேசங்களை கண்டி இராச்சியத்துடன் இணைத்துக்கொண்டான். மேலதிகமாக திருகோண மலையைச் சேர்ந்த பாணம, ஊவா வெல்லஸ்ஸ, தமன்கடுவை பின்னதன்ன, நுவரகலாவிய ஆகிய பிரதேசங்களையும் மலைநாட்டுடன் சேர்த்துக்கொண்டான். 1505 வரை கண்டி இராச்சியம் பரப்பளவில் கோட்டை இராச்சியத்தைவிட பெரிதாகவிருந்தது. அத்தோடு மலைகள், காடுகள், நீர்நிலைகள் என்பன மலையக இராச்சியத்திற்கு இயற்கை அரணாகவிருந்தன.



கண்டி இராச்சியத்தின் புனிததந்ததாது கோயில் (2000 ஆண்டுகள் பழமையானது)

சேனா சம்மத விக்கிரமபாகுவிற்குப் பின்னர் அவனது மகனான ஜயவீரபண்டார (1511-1551) கண்டி இராச்சியத்தின் அரசனாகினான். சீதாவாக்கையின் மன்னனான மாயாதுன்னையும் இளவரசன் இராஜசிங்கனும் மலைநாட்டரசினைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற பயம் இருந்தது. அதனால், போர்த்துக்கேயரின் உதவியை நாடி இருந்தான். ஜயவீரபண்டாராவுக்குப் பின்னர் அவனது மகனான கரலியத்த பண்டார கண்டி இராச்சியத்தின் அரசனாகினான் (1551-1581). 1582 இல் சீதாவாக்கையின் மன்னன் முதலாம் இராஜசிங்கன் கண்டியைக் கைப்பற்றித் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டான். தனது இராச்சியத்தைப் பாதுகாத்துத் தருமாறு போத்துக்கேயரை வேண்டிய கரலியத்தை பண்டாரா கிறிஸ்தவத்தை தழுவிக்கொண்டான். அத்துடன் தன் மகள் குசுமாதேவி மருமகன் ஜயசிங்க பண்டாரன் ஆகியோருடன் போத்துக்கேயரிடம் அடைக்கலம் புகுந்தான்.



கண்டி இராச்சியத்தில்-விழாக்கோலம்

இராஜசிங்கனால் மலைநாட்டை நன்கு நிர்வகிக்க முடியவில்லை. மலைநாட்டுத் தலைவர்கள் அவனுக்கு எதிராக புரட்சி செய்தனர். இப்புரட்சிக்கு தலைமை தாங்கியவனாக கருதப்பட்ட வீரசுந்தர பண்டாரன் என்பானை மன்னன் கொலை செய்வித்தான். அவனது மகனான கோணப்பு பண்டாரன் இராஜசிங்கனைப் பழிவாங்கும் பொருட்டு போர்த்துக்கேயருடன் சேர்ந்து கொண்டான். 1591 இல் கோணப்பு பண்டாரனின் தலைமையில் வந்த படை, இராஜசிங்கனுடன் கனே தன்னை என்றவிடத்தில் மோதி வெற்றிபெற்றது. கண்டி அரசின் மன்னனான டொன்பிலிப் யமசிங்க பண்டாரன் முடிசூடிக் கொண்டான். 1592 இல் யமசிங்க பண்டாரன் திடீரென மரணமடைந்தான் அதன் பின்னர் கோணப்பு பண்டாரன் என்பான் விமலதர்ம சூரியன் என்ற பட்டப் பெயருடன், கண்டிராச்சியத்தின் அரசனாகினான்.

**பொருளாதார சமூக சமயநிலை**

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோட்டை, கண்டி (மலையகம்) யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களில் சமய மற்றும் சமூக பொருளாதாரத் துறைகளில் பெரிய மாற்றங்கள் இருக்கவில்லை. நாட்டின் அரசன் பூபதி என்றழைக்கப்பட்டான். பூபதி என்பது நிலத்திற்கு அதிபதி எனப்பொருள்படும். நாட்டின் நிலம் முழுவதும் அரசனின் சொந்தம் என்று ஏற்கப்பட்டிருந்தது. வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்பு அரசனுக்குரிய தனியுரிமையாகும். கறுவா தந்தம், மாணிக்கம், வாசனைப்பொருட்கள் என்பன வர்த்தகப்பொருட்களாக இருந்தன. அரசசேவைக்கு கூலியாக மக்களுக்கு நிலம் வழங்கல் அப்போது நிலவிய சம்பிரதாயமாக இருந்தது. அரச வருமானத்தைப் பெருக்க மன்னன் பல வரிகளை விதித்திருந்தான். சம்பிரதாயவரி, உற்பத்திப்பொருட்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்கினை அரசுக்கு வரியாகக் கொடுத்தல், இராசகாரிய முறைமூலம் சேவைகளை அரசுக்கு வழங்கல் என்பன மூலமும் வரி செலுத்தப்பட்டது. அன்று நிலவிய முக்கியமான பொருளாதார நடவடிக்ககளாக விவசாயம், மீன்பிடி, மந்தை வளர்ப்பு, சிறுகைத்தொழில், வர்த்தகம் என்பன விளங்கின. முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இன்று போல அன்றும் விவசாயமே இருந்தது. சுயதேவைக்குரியதாக விளங்கியது. பண்டமாற்றுக்குரியதாக இருந்தது. ஒருவருக்கொருவர் விவசாய வேலைகளுக்கு பரஸ்பரம் உதவி வழங்குவதாக இருந்தது. மருத்துவ இயல்புடைய நெல் வர்க்கங்களையே பயிரிட்டனர். அதனால் பயன் கூடியதாகவும் விளைச்சல் குறைவானதாகவும் இருந்தது. விவசாயத்தில் மாடுகளும் மனித வலுவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. நெல்லோடு சிறுதானியப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டன. காய்கறிகள், பழவகைகள் முதலானவை தோட்டப் பயிர்களாக செய்கை பண்ணப்பட்டன. ஈரப்பலாக்காய், தேங்காய் முதலானவை உணவில் அதிகமாகச் சேர்க்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பனைச் செய்கை முக்கியம் பெற்றிருந்தது. விவசாயத் தேவைகளுக்காகவும் வீட்டுத் தேவைகளுக்காகவும் மாடுகள், ஆடுகள் என்பன வளர்க்கப்பட்டன. உழுதல், சேறடித்தல், சூடுமிதித்தல் என்பவற்றிற்கு எருமைகள், எருதுகள் என்பன உதவின. பசுக்களும் ஆடுகளும் பால் தேவையைப் பூர்த்திசெய்தன. இறைச்சிக்காக ஆடுகளும் கோழிகளும் வளர்க்கப்பட்டன. கரையோரக் கடற்கரைகளிலும் உள்ளூர் நீர்த்தேக்கங்களிலும் பாரம்பரிய கலங்களையும் வலைகளையும் பயன்படுத்தி மீன்பிடித்தல் நடைபெற்று வந்தது.

(தொடரும்)



கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் அராஜசிங்கன்





கண்டி இராச்சியக் கொடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை விவகார வீடியோவை எம்.கே.நாராயணன் மறைத்து விட்டார்

## சி.பி.ஐ.அதிகாரி மீண்டும் குற்றச்சாட்டு

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட வழக்கில் மிக முக்கியமான வீடியோ கசட் சாட்சியம் ஒன்று பதுக்கப்பட்டதாகவும் இதைச் செய்தவர் அப்போது ஐ.பி. தலைவராக இருந்த எம்.கே.நாராயணன் என்றும் அதை, வழக்கை விசாரித்த கார்த்திகேயன் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டதாகவும் இந்த வழக்கில் சிபிஐயின் தலைமை புலனாய்வு அதிகாரியாக செயற்பட்ட கே.ரகோத்தமன் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த ரகோத்தமன் ஏற்கனவே ராஜீவ் கொலை வழக்கு- மர்மம் விலகும் நேரம் என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். தற்போது Conspiracy to kill Rajiv Gandhi- From CBI files என்ற புதிய புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்த இரண்டு புத்தகங்களிலும் முக்கியமான விடயமாக ரகோத்தமன் சொல்வது ஒரு வீடியோ கசட் மறைக்கப்பட்டு விட்டது என்பதுதான்! ராஜீவ் கொல்லப்பட்ட மறுநாள் அப்போதைய பிரதமர் சந்திரசேகருக்கு ஐ.பி. அமைப்பின் தலைவராக இருந்த தற்போதைய மேற்கு வங்க ஆளுநரான எம்.கே. நாராயணன் ஒரு கடிதம் எழுதினார்.

அதில் எங்களிடம் ஒரு முக்கிய கசட் உள்ளது. அதில் அந்த பெண்மணியை அடையாளம் காண முயற்சிக்கிறோம் என்று கூறியிருக்கிறார். ஆனால், கடைசிவரை ஐ.பி. வசம் இருந்த அந்த கசட் சி.பி.ஐயிடமோ வேறு ஒரு விசாரணை அமைப்பிடமோ ஒப்படைக்கவே இல்லை என்பதுதான் ரகோத்தமனின் குற்றச்சாட்டு.

ராஜீவ் கொலை வழக்கில் ஹரிபாபு எடுத்த புகைப்படங்கள்தான் பிரதான ஆதாரமாக இருந்தது. இந்த நிலையில் சிவராசன், தணு உள்ளிட்டோர் சில மணி நேரம் ஸ்ரீபெரும்புதூர் மைதானத்தில் காத்திருந்து ராஜீவை கொலை செய்திருக்கின்றனர்.

அந்த சில மணி நேரங்களில் அவர்கள் யார் யாருடன் பேசினர்..? எப்படி ராஜீவுக்கு மாலையிடும் இடத்துக்கு மெதுமெதுவாக நெருங்கினர் என்பது போன்ற விபரங்கள் ஐ.பி.வசம் இருந்த கசட்டில் பதிவாகி இருக்கலாம் என்பதுதான் ரகோத்தமனின் சந்தேகம்.

காங்கிரஸ் பிரமுகரான மரகதம் சந்திரசேகர் மூலமே சிவராசன் குழுவினர் ஸ்ரீபெரும்புதூர் மைதானத்துக்குள் நுழைய முடிந்தது என்பது பலதரப்பிலும் வெளியான தகவல். ஆனால், ராஜீவ் கொலை வழக்கில் அவர்கள் சேர்க்கப்படவில்லை என்பதால் ரகோத்தமன் இத்தகைய சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

தற்போதைய புத்தகத்திலும் கசட் பற்றிய எம்.கே.நாராயணின் 1991 ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி கடிதம் பற்றியும் இந்த கசட்டுக்கு என்னாச்சு என்றும் மீண்டும் ரகோத்தமன் கேள்வி எழுப்பியிருக்கிறார். (அ-2)

## தே.சு.முவின் எம்.பி. ஐ.தே.கவில் இணைவு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஞ்சான் உம்மா ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டார்.

கொழும்பு தேசிய சேவை சங்க அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அஞ்சான் உம்மா ஐ.தே.க. உறுப்புரிமையை பெற்றுக் கொண்டார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் ஐ.ம.சு.மு. சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உம்மா, ஜே.வி.பி. இரண்டாக பிளவுற்று விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி உருவானதும் அதில் இணைந்து கொண்டார்.

எனினும் தற்போது அவர் ஐ.தே.கவில் இணைந்து எதிர்கால அரசியலை தொடரவுள்ளதாக அறிவித்துள்ளார். (அ-2)

# திட்டமிடல் இல்லாது உர விநியோகம்

## விவசாயிகள் கவலை


(புளியம்பொக்கணை)

காலபோக நெற்செய்கைக்கான உரவிநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தில் உரவிநியோகம் சீரான முறையில் இடம்பெறுவதில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புகள் ஊடாக உரவிநியோக திகதி அறிவிக்கப்பட்டால் விவசாயிகள் தமது வேலைகளையும் விட்டு உரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக செல்கின்றபோது வேறு கிராம விவசாயிகளுக்கே உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

அங்கு சென்ற விவசாயிகளை காத்திருக்க வைத்துவிட்டு மறுநாள் வரும்படி கூறுகின்றனர். இதனால் இவ்விவசாயிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர். எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உர விநியோகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட திகதியிலேயே உரத்தை வழங்குமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

# குஞ்சை ஈன்ற கோழி; கேரளாவில் அதிசயம்



கோழிகள் முட்டையிட்டு அதை 21 நாட்கள் அடைகாத்த பின்னர் குஞ்சு பொரிப்பது வழக்கம். ஆனால், கோழி ஒன்று முட்டைக்குப் பதிலாக கோழிக்குஞ்சை ஈன்றெடுத்த அதிசய சம்பவம் கேரள மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த டி.பி.பரதன் தனது வீட்டில் ஒரு கோழியை வளர்த்து வந்தார். இந்தக் கோழி மற்றைய கோழிகளைப் போல முட்டை போட்டாலும் அதை அடை காப்பதில்லை. இந்நிலையில் கடந்த சனிக்கிழமை குறித்த கோழி வழக்கத்துக்கு மாறாக தொப்புள் கொடியுடன் கூடிய ஒரு குஞ்சை ஈன்றது. குஞ்சை ஈன்ற வேகத்தில் அந்தக் கோழி உடனடியாக வழக்கம் போல இரைதேடச் சென்று விட்டது.

இதைப் பார்த்த கோழியின் உரிமையாளர் ஆச்சரியம் அடைந்ததோடு அக்கம்பக்கத்தில் இருந்தவர்களுக்கு தகவல் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு மக்கள் கூட்டம் கோழிக்குஞ்சைப் பார்ப்பதற்கு அலைமோதியது. (அ-2)

# அவசர நிவாரணப் பணிகளுக்கு போதியளவு நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசர நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவென போதியளவு நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறுகையில், கடும் காற்று மற்றும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனுக்குடன் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களுக்கு நிவாரணப் பணிகளுக்கென முதற்கட்ட நிதி அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்திற்கே அதிக நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முதலில் சமைத்த உணவும் அதனை தொடர்ந்து உலர் உணவும் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு மாவட்டச் செயலாளர்கள் கோரும் நிதியை உடனுக்குடன் அனுப்பி வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எந்த சூழ்நிலைக்கும் முகம்கொடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் என்றும் அவர் கூறினார். (அ-2)

# 3 கிலோமீற்றர் தூரத்தில் இருந்த திருடனை காட்டிக் கொடுத்த நாய்

(கொழும்பு)

பதுளை நகரத்தில் கடைகளை உடைத்து அங்கிருந்து சீஸ், சொக்லேட், சிகரெட் ஆகிய பொருட்களுடன் பணத்தையும் களவாடிச் சென்ற ஒரு திருடன் ஐந்தறிவு படைத்த ஒரு மிருகத்தின் திறமையினால் கைது செய்யப்பட்டான்.

பதுளை பொலிஸ் நிலையத்தின் நாய்களை பராமரிக்கும் பிரிவின் சார்ஜன்ட் ஜயதிஸ்ஸ தனது சொற்படி செயற்படும் ஷொடோ என்ற பளபளக்கும் கறுப்பு நிறத்தையுடைய துப்பறியும் நாயின் மூலம் இந்த கொள்ளையனை கைதுசெய்தார்.

33 வயதுடைய குறித்த கொள்ளைக்காரன் பதுளையில் உள்ள பால் விற்கும் கடையின் பூட்டை உடைத்து கடைக்குள் புகுந்து ஒரு பிளாஸ்ரிக் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த பணத்தை திருடியுள்ளான்.

இந்த திருட்டுப் பற்றி தகவல் தெரிந்தவுடன் சார்ஜன்ட் ஜெயதிஸ்ஸ தனது செல்ல நாய் ஷெடோவுடன் ஸ்தலத்திற்கு சென்று நாயை அங்குள்ள பொருட்களை மோப்பமிட செய்தார். பணம் வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பெட்டியை மோப்பம் செய்த அந்த துப்பறியும் நாய் மறு பேச்சின்றி மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு நடந்தே சென்றது.

அங்கு ஓரிடத்தில் மறைந்திருந்த கொள்ளைக்காரனை அந்தநாய் தனது மோப்பமிடும் சக்தியைக் கொண்டு காட்டிக் கொடுத்தது. (அ-2)





கிளிநொச்சி வலய முன்பள்ளிகளின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் உள்ளிட்ட விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் முன்பள்ளி ஆசிரியர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- மல்லாகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதாகரமாக உருவெடுக்கும் இளவயதுக் கருத்தரிப்பு

(கடந்த வாரத் தொடர்ச்சி)...

இவ் ஆலோசனைகள் இளையோர் அனைவருக்கும் ஏற்புடையதாகும். மேலும் இளையோர் வட்டத்தில் இளம் பெண்கள் தொல்லைக்கு, நெருக்கீட்டிற்கு ஆளாக்கப்பட்டால் பின்வருவனவற்றை பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவையாவன,

◆ பதிலளிக்க முற்படாதிருத்தல்

◆ பரிகாசத்தை பொருட்படுத்தாமல் இருத்தல்

◆ முகத்திற்கு எதிரே உரத்த குரலிலும் சுய நம்பிக்கையுடனும் அவர்களை எதிர் கொள்ளல்

◆ அவ்விடத்தில் இருத்தலை தவிர்த்துக் கொள்ளுதல்

◆ உதவியை நாடுதல்

◆ பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் சொல்லுதல்

**2. குடும்ப ரீதியில் பெற்றோருக்கான ஆலோசனைகள்**

சமூகத்திற்கு தனியன்களை அறிமுகப்படுத்துவதில் குடும்பமே பிரதான இடம் வகிக்கின்றது. இதனால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குரிய ஆலோசனைகளை வழங்குவது இன்றியமையாததாகின்றது. அவ்வாறான ஆலோசனைகள் பின்வருமாறு,

◆ பெண்பிள்ளைகள் பருவ வயதை எட்டியதுமே பருவமடைதல் மூலம் ஏற்படும் உடலியல் மாற்றங்கள் பற்றி பெற்றோர் குறிப்பாக தாய் உரையாடுவது அவசியம்.

◆ பிள்ளைகளின் மன நிலையை புரிந்து பெற்றோர்கள் செயற்பட வேண்டும். **அடக்கி வளர்க்கின்றோம்** என்று நான்கு பேரின் முன்னால் கண்டிப்பது, அடிப்பது தவிர்க்கப்பட வேண்டும். சந்தேகப்படுவது, ஒவ்வொரு நாளும் குறை சொல்வது என்பன தவிர்க்கப்படுதல் சிறந்தது.

◆ பிள்ளைகள் பாலியல் பற்றியோ பால்வினை நோய்கள் பற்றியோ கேட்கும் போது அறிவியல் அளவாக விடை அளித்தல் சிறந்தது. பிள்ளைகள் இவ்வாறு வினவும் போது ஏசக்கூடாது. பயமுறுத்த கூடாது. இந்நிலை மறைமுகமாக் குழந்தைகளை இதுபற்றி தேடவும் பார்க்கவும் தூண்டி விடும்.

◆ பெற்றோர்கள் பிள்ளைகளின் பருவ வளர்ச்சிகள் பற்றி கதைப்பதற்கு தயக்கமாக இருந்தால் இதற்கான புத்தகங்களை பெற்றுக் கொடுப்பது சிறந்தது.

◆ வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் எனில் பிள்ளைகளுடன் தினமும் கதைப்பதற்கு நேரம் ஒதுக்குதல் சிறந்தது.

◆ பிள்ளைகள் பழகுகின்ற நண்பர்கள் பற்றி அறிந்து வைத்திருப்பது சிறந்தது. இதற்காக பிள்ளைகளை தண்டிப்பதை தவிர்த்து **சமூகத்தில் ஒரு நற்பிரஜை எனது** பிள்ளை என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும்.

◆ குடும்பத்தில் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட அங்கத்தவரின் பிரச்சினைகள், உணர்வுகளை விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் ஒவ்வொருவரும் தமக்குள்ளே ஓர் வளவாளர்களாக இருக்க வேண்டும்.

◆ பெற்றோர்கள் பிள்ளைகள் பார்க்கும் திரைப்படங்கள், நாடகங்கள் மற்றும் ஈடுபடும் விடயங்களை கவனித்தல் வேண்டும். அவற்றிலுள்ள விடயங்களை சமூகத்தில் காணப்படுகின்ற தோற்றப்பாடுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் கலந்துரையாட வேண்டும். இதனால் பிள்ளைகள் சமூகத்தில் காணப்படும் விடயங்களை அறிந்து கொள்வதற்கும் தங்கள் நிலையினை விளங்கிக் கொள்ளவும் வழி ஏற்படுகின்றது.

◆ பெற்றோர் குறிப்பாக தாய்மார்கள் அதிக நேரத்தை தொலைக்காட்சி நாடகத் தொடர் பார்ப்பதில் செலவிடுகின்றனர். இதனை தவிர்த்து அல்லது ஓரளவு குறைத்து பிள்ளைகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதே சிறந்தது.

**3. ஆண் நண்பர்களை கொண்டுள்ள பெண்களுக்கான ஆலோசனைகள்**

◆ பாடசாலைக் கல்லூரிக் காலத்தில் படிப்பு, எதிர்கால இலட்சியம் தொடர்பாக பேசுவது, விவாதிப்பது, உதவிக் கொள்வது மட்டுமே நட்பாகும். அதைத்தாண்டி பரிசு கொடுத்தல், பெறுதல், தனிமையில் சந்தித்தல் என்பன நட்பு வட்டத்தை தாண்டியவை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

◆ ஆண் நபர்களை நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால் அவ்விடயத்தை பெற்றோரிடமோ அல்லது நம்பிக்கைக்குரியவரிடமோ கூறுங்கள். பெற்றோரிடம் கூறுவதே சிறந்தது. அல்லது பெற்றோர் என்ற நிலையில் யாரை நினைக்கிறீர்களோ அவர்களிடம் குறிப்பிடுதல் வேண்டும்.

◆ பெற்றோருக்கு தெரியாமல் ஆண் நண்பர்களுடன் வெளியில் செல்வதை தவிர்த்துக் கொள்வதுடன் தெரிந்து பழகுகிறேன் என்று அவர்களை வீட்டிற்கு அழைத்து வருவதையும் தவிர்க்க வேண்டும். இல்லையேல் இந்நிலை தொடருமானால் எப்போது வேண்டுமானாலும் பிரச்சனை உருவாகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

◆ தேவையில்லாமல் தொடர்ந்து வரும் ஆண்களை பற்றியும் தொல்லை கொடுப்பவர்களை பற்றியும் பெற்றோரிடமும் பொறுப்புக்குரியவரிடத்தில் குறிப்பிடுதல் .

◆ தவறான நட்பை ஆரம்பத்திலே துண்டித்து விட வேண்டும்.

◆ பெண்களின் பாதுகாப்பிற்கு பெண்கள் தான் பொறுப்பாளி என்ற அடிப்படையில் செயற்படுதல்

◆ நண்பர் தவறான பார்வை கொண்டவர் என இனம் கண்டால் அவரது நட்பை துண்டித்து விடுவதில் தவறில்லை.

**4. பாடசாலை ரீதியிலான ஆலோசனைகள்**

சமூகத்திலே தன்னியல்புடன் இயங்கும் நிறுவனமாக பாடசாலைகள் தொழிற்பட முடியாது. சமூகத்தை மீளமீள உருவாக்கி கொள்ளும் இயல்பு பாடசாலைகளுக்குண்டு. சமூகத்தின் இயல்புகளுடன் இணைந்து செல்லக் கூடியவாறு பின்வரும் சமூகமயமாக்கல் பரிமாணங்களை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவையாவன,

◆ சமூக உணர்வை அல்லது பிரக்ஞையை வளர்த்தல்.

◆ சமூக புலக்காட்சியை வளர்த்தல்

◆ சமூக நடத்தைகளுடன் தனியன்களை இசைவுபடுத்தல்

◆ சமூக கட்டுப்பாடுகளுக்கு கீழ்படிய வைத்தல்

◆ சமூக விழுமியங்களை புகட்டுதல்

◆ பண்பாட்டுக் கோலங்களை அறிவுறுத்தல்

◆ சமூக ஊடாட்டங்களையும் தொடர்பாடலையும் வளமாக்கிக் கொள்ள உதவுதல்

◆ சமூக கட்டமைப்பை பராமரிப்பதற்குரிய அறிக்கை நிலையிலும் உதவுதல்.

◆ சமூகம் சார்ந்த ஒழுக்கம் நட்பு பற்றி கலந்துரையாட வேண்டும்.

◆ பாடப்புத்தகங்களில் உள்ள கட்டிளமைப் பருவத்தினர் தொடர்பான உடலியல் மாற்றங்கள் போன்றவற்றை சமகால சமூக நிகழ்வுகளுடன் ஒப்பிட்டு கற்பித்தல் அவசியமானது.

இவ்வாறான ஆலோசனைகள் நுண்ணிலையளவில் யாழ். சமூகப்புலத்தின் மக்களின் இருக்கை நிலையினை பாதுகாக்கும் பொறிமுறையாகும். ஒரு பிரச்சினைக்கு அடிமட்ட அளவில் பலவீனங்கள் காணப்படும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்கமையவே இத்தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசு சார்ந்த, அரசு சாரா அமைப்புக்கள் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தாலும் தனியன்கள் குடும்பம் என்ற அடிப்படை எல்லையில் மாற்றம் ஏற்படாத போது அரசின் விழிப்புணர்வு, சட்ட ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இவ்விடயத்தை குறைக்க முடியாது.

நட்பு, காதல், உறவுமுறைகள் என்பது ஓர் உணர்வு. இவை தவறாகப் பேசப்படுவது அருவருப்பான ஒன்றில்லை. பெண் கள் எப்போதும் தங்களது சமூக அங்கீ காரம் பெற்ற திருமண முறையை அல்லது சட்ட ரீதியான திருமணத்தை பின்பற்று வதே அவர்களின் சமூக இருக்கை நிலை க்கு ஏதுவாகின்றது.

**யோ. சங்கீத்தா**
**மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

ஆணும் பெண்ணும் சமுதாயத்தில் ஒன்றையொன்று மிகை நிரப்பு அங்கங்களாகின்றனர்.. இவற்றில் ஒருவரின் அந்தஸ்தினை பாதிக்கும் செயல் இருவர்க்கத்தினரையும் பாதிக்கின்றது என்ற கருத்தினையும் மறந்து விட முடியாது. அத்துடன் உங்களின் சகோதரம் எவ்வளவு அழகாகவும் ஈர்ப்புடையவராகவும் இருந்தாலும் உங்கள் சகோதரர் என்பது தெரியாமலே அவர்கள் மீதான ஈர்ப்பு உண்டாகும்.

ஆயினும் தனியன்கள் தாம் வாழும் சமூகத்தையும் தமது சமூகப் பெறுமதியையும் அதன் உயர்தரமான பண்பாட்டையும் கவனத்தில் எடுத்து தனியன்கள் செயற்படும் போது மட்டுமே இளவயதுக் கர்ப்பம் என்ற விடயத்தை இல்லாமல் செய்ய முடியும் என்பதுடன் அநாதை சிசுக்களின் எண்ணிக்கையும் சட்டவிரோத கருக்கலைப்புக்கள், தந்தை தெரியாத குழந்தைகளின் உருவாக்கம், விலகல் நடத்தையாளர்களின் எண்ணிக்கையும் குடும்பம் மற்றும் திருமணம்போன்ற நிறுவனங்களின் ஒழுங்கமைவின்மையையும் சமூகவிரோதச் செயல்களினையும் தவிர்க்க முடியும்.

(முற்றும்)

# 75 சதவீத தாதியர் வெற்றிடங்களை நிரப்ப மாகாண சபைக்கு அதிகாரம்


## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

மாகாண சபைகள் தமது அதிகாரத்தின் கீழ் வருகின்ற வைத்தியசாலைகளில் காணப்படும் தாதியர் வெற்றிடங்களில் 75 சதவீதத்தை நிரப்புவதற்கான அதிகாரத்தை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளதென தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி விடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய கூறினார். ஆனால் அமைச்சின் இத்தீர்மானத்தை தமது சங்கம் எதிர்ப்பதாகவும் அவர் கூறினார்.

இவ்வதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் போது அது தாதியர் நியமனத்தில் அரசியல் தலையீட்டுக்கு வழிகோலும். நியமனங்களின் போது வெவ்வேறான நியமனங்களை மாகாணசபைகள் பின்பற்றும். அப்போது முக்கியமான தொழில் வாண்மையான தாதியத்தின் தரத்தை எம்மால் உயர்த்தமுடியாமல் போகும். மாகாண சபைகள் குறைந்த தராதரத்துடன் தாதியர் நியமனங்களைச் செய்யவும் கூடும் எனவும் அவர் கூறினார். அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் இரு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியதாக அரசாங்க தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இதன் பலனாக வர்த்தமானி அறிவித்தலில் இரு வாசகங்கள் நீக்கப்பட்டனவெனவும் அவர் கூறினார்.


தாதியரொருவர் முதல் நியமனம் பெற்ற வைத்தியசாலையில் 10 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனைக்குப் பதிலாக 5 வருடங்கள் வேலை செய்ய வேண்டுமென்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதெனவும் தாதியர்கள் தனியார் நிறுவனங்களில் வேலை செய்யக்கூடாதென்ற வாசகமும் வாபஸ் பெறப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார்.



யா/ இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தின் பெற்றோர் தினவிழாவும் விளையாட்டு நிகழ்வும் அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ஆன். அருந்தவராணி நோபேட் உதயகுமார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் பிரதம விருந்தினரும் யா/ மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலை அதிபருமான சூ. நோபேட் உதயகுமார், வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13வது திருத்தத்திற்கு எதிரான கோஷத்தோடு தெரிவுக்குழு அமைப்பது சாத்தியமா?



## இலங்கையில் பிரிவினைவாதம் 1970 களில் தோற்றம் பெற்றுவிட்டது

13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் நாடு என்ன பயனை அடைந்திருக்கிறது. என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கேள்வி யெழுப்பியிருக்கிறார். அதேவேளை 13வது அரசியலமைப்புத் திருத்தத் திற்காக தமிழ்க்கட்சிகளும் இடது சாரிக் கட்சிகளும் குரல்கொடுத்து வருகின்றன. 13வது அரசியல் அமைப் புத் திருத்தத்தினால், என்ன தீங்கு ஏற் பட்டது என்பதுதான் அவர்களின் கேள்வியாக இருக்கிறது.

நன்றாகக் கவனித்துப் பார்த்தால், இந்த இரண்டு சாராரும் உண்மையைத் தான் பேசுகிறார்கள், நிஞாயமான கேள் வியைத்தான் கேட்கிறார்கள். அமர சிங்க கேட்பதைப்போல உண்மையி லேயே 13வது அரசியலமைப்புத் திருத்தத்தால் ஏதாவது நன்மை நாட் டுக்கு கிடைக்கிறதா? அதன் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா?

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந் திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அறிமுகப் படுத்தப்பட்டது. 25 ஆண்டுகள் கழிந் தும் தமது பிரச்சினைகள் தீர்ந்ததாக தமிழர்கள் உணரவில்லை. அதாவது 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் நோக்கம் நிறைவேறவில்லை. அத னால்தான் தமிழ்த் தலைவர்கள் புதிய தீர்வுகளைக் கேட்கிறார்கள்.

மறுபுறத்தில் மாகாண சபைகளை எதிர்ப்பதற்காக அச்சபைகளால் நாட்டுக்கு என்னதான் தீங்கு இழைக் கப்பட்டுள்ளது. என்றும் கேள்வியெழுப் பலர்ம். மாகாணசபைகள் நாட்டு பிரிவினைக்கு இட்டுச் செல்கிறது என்று சில பேரினவாத தலைவர்கள் வாதிடலாம். ஆனால், அவ்வாறானோர் மறந்துவிடும் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் இலங்கையில் பிரி வினைவாதமானது மாகாணசபை களோ அல்லது அவற்றுக்கு அடிப்ப டையாக அமைந்த அதிகார பரவலாக் கல் என்ற எண்ணக்கருவோ அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்னரே உரு வாகியதொன்றாகும் என்பதே.

சரியாகக் கூறுவதாயின் 13வது அரசி யலமைப்புத் திருத்தமோ அல்லது மாகாண சபைகளோ பிரிவினை வாதத்தைக்கொண்டு வரவில்லை. மாறாக, பிரிவினை தம்தான் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தையும் அதன் மூலம் மாகாண சபைகளையும் கொண்டுவந்தது.

இலங்கையில் பிரிவினைவாத மானது 1970 களில்தான் கவனத்திற் கொள்ளக் கூடிய வகையில் தோற் றம் பெற்றது. 1976 ஆம் ஆண்டு மே மாதத்தில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட் டின் போது அது உத்தியோக பூர்வ மாக அரசியல் களத்திற்கு வந்தது.

இவ்வாறு களத்திற்கு வந்த பிரி வினை வாதத்திற்கு பரிகாரமாகவே இந்திய வெளியுறவுச் செயலர்களான ஜீ பார்த்தசாரதி, மற்றும் ரொமேஸ் பண்டாரி ஆகியோரின் தலையீட்டில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையிலான இலங்கை அரசாங் கம் 1980களின் ஆரம்பத்தில் அதிகா ரப் பரவலாக்கல் கோட்பாட்டை ஏற் றுக்கொண்டது. அதன் பிரகாரம் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டின் போதும் 1986 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசியல் கட்சி மாநாட் டின் போதும் மாகாண சபைகளை அறிமுகப்படுத்துவது பற்றி ஆராயப்பட் டது. இறுதியில் வேறு சில பூகோள அரசியல் காரணங்களுக்காக இந்தியா பலாத்காரத்தைப் பாவித்து, 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந் தத்தின் மூலம் இலங்கை அரசாங் கத்தை 13 வது அரசியலமைப்புத்திருத் தத்தையும் அதன் மூலம் மாகாணசபை களையும் ஏற்றுக்கொள்ளச் செய்தது.

இதுதான் வரலாறு. எனவே13வது அரசியலமைப்புத் திருத்தமோ அல்லது மாகாண சபைகளோ நாட்டுப் பிரிவி னைக்கு இட்டுச்செல்கிறது என்று வாதிட முடியாது.

இப்போது 13வது அரசியல மைப் புத் திருத்தம் தொடர்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள விவாதம் அச்சட்டத் திருத்தம் நம்மையானது என்பதற் காகவோ அல்லது தீமையானது என்பதற்காகவோ ஏற்பட்டதல்ல. இது வேறு அரசியல் காரணங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். குறிப் பாக திவிநெகும சட்ட மூலத்தை நிறை வேற்றிக் கொள்ள மாகாண சபைக ளின் அனுமதி வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையி னால் ஏற்பட்ட நிலைமையாகும்.

எனினும் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச்செய்ய வேண்டும் என்று எழுப்பப்பட்ட கோஷத்தின் கார ணம் தற்போது குறைந்து வருகிறது. ஜனாதிபதியின் சகோதரர் என்ற காரணத்தினால் ஏறத்தாழ ஜனாதிபதி யைப் போல் நடந்துகொள்ளும், அதேபோல் மக்களாலும் ஜனாதி பதியைப்போல் மதிக்கப்படும் பாது காப்புச் செயலர் கோத்தபாய ராஜ பக்சதான் இம்முறை 13வது அரசிய லமைப்புத் திருத்தத்திற்கு எதிரான போரை ஆரம்பித்து வைத்தார். ஆனால், அந்தக்காரணத்தையும் மதியாது ஆளும் கட்சியைச்சேர்ந்த சில உறுப்பினர்கள் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்ப்பவர்களை எதிர்க்க முன் வந்துள்ளனர். அமைச்சர்களான வாசு தேவ நானயக்கார, திஸ்ஸ விதாரண மற்றும் டியூ குணசேகர போன்ற இடதுசாரிகள் ஆரம்பத்திலேயே 13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரான கருத்துக்களை சாடிவந்தனர். இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி யைச் சேர்ந்த அமைச்சர்களும் 13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரானவர்களை பொருட்படுத் தாததைப் போல் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இவர்களில் முதலாவதாக அமைச் சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக் வெல்ல 13வது அரசியலமைப்பு திருத் தத்தை மாற்றியமைக்க அரசாங்கம் எவ்வித முடிவையும் எடுக்கவில்லை என்றார். அரசாங்கம் கோத்தபாய ராஜபக்சவின் கருத்தை ஏற்று 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை மாற்றி யமைக்க நடவடிக்கை எடுக்கும் அறி குறிகள் இருந்தால் ரம்புக்வெல்ல ஒருபோதும் அவ்வாறு கூறியிருக்க மாட்டார்.

அதனை அடுத்து சிறிலங்கா சுதந்தி ரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறி சேனவும் இதே கருத்தை வெளியிட்டி ருந்தார். சிலவேளை சர்வதேச நெருக் குதல், 13வது அரசியலமைப்புத் திருத் தத்திற்கு எதிராக அரசாங்கத்திற்குள் வளர்ந்துவந்த நிலைப்பாட்டை முடக் கியிருக்கலாம்.

ஒக்டோபர் 22 ஆம்திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதிவரை ஐ.நா. மனித உரிமை பேரவையின் உலகளா விய இடைக்கால மீளாய்வுக் கூட்டங் கள் நடைபெறவிருக்கின்றன. நவம் பர் மாதம் 1ஆம் திகதிய கூட்டத்தில் இலங்கை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன. அப்போது 13வது அரசியலமைப்புத் திருத் தத்தைப் பற்றிய கேள்வியொன்றும் இலங்கையிடம் கேட்கப்படவிருக் கிறது. என தெரியவருகிறது. போதாக் குறைக்கு இலங்கையைப் பற்றி மீளாய்வு செய்யும் குழுவிற்கு இந்தியாவே தலைமை தாங்குகிறது.

இதற்கிடையே 13வது அரசியல மைப்புத் திருத்தத்தின் சிற்பியான இந்திய அரசாங்கம் அத்திருத்தத்தை எதிர்த்து கருத்து வெளியிட்ட கோத்தபாய ராஜபக்சவை பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. ஆனால், கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட அவரது இந்திய விஜயத்தின்போது 13வது அரசியலமைப்புத்திருத்தம் பற்றிய விடயம் ஆராயப்படவில்லை.

அது சரிதான். ஏனெனில் இலங் கையில் என்ன அந்தஸ்தில் அவர் இருந்தாலும் இந்தியாவுக்கு அவர் ஒரு அதிகாரி மட்டுமே. அதுவும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரி மட்டுமே. அவரோடு இந் தியா, அரசியல் விடயங்களை ஆரா யப்போவதில்லை. ஆனால், 13வது அரசியலமைப்புத்திருத்தத்திற்கு எதிராக அவர் கருத்து வெளியிட்ட வுடன் அவர் இந்திய அதிகாரிகளை சந்திக்கப்போகிறார் என்ற உணர்வே அரசாங்கத்தை சிந்திக்கச் செய்திருக்க வேண்டும். எனவேதான் அமைச்சர் களான ரம்புக்வெல்லவும் சிறிசேன வும் நாங்கள் அப்படி ஒன்றும் செய் யப் போவதில்லை என்ற தோற ணையில் கருத்து வெளியிட்டு இருக் கிறார்கள் போலும்.

முக்கியமானதோர் விடயம் என்ன வென்றால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவென நியமிக் கப் படவிருக்கும் நாடாளுமன்றத் தெரி வுக்குழுவில் சேர்ந்துகொள்ளு மாறு அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை வற்பறுத்திக் கொண்டு இருக்கும் பின்னணியிலேயே அரசாங் கத்திற்குள் இருந்தே 13வது அரசி யலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக கோஷங்கள் எழுந்தன. அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிரான கருத்துக் களைக் கொண்ட அரசியல் கட்சிக ளின் தலைவர்கள், அதிகமாக நிய மிக்கப்படும் நாடாளுமன்றத் தெரி வுக்குழுவில் தாம் அங்கம் வகிப்பதில் பயனில்லை என்பது தெரிவுக் குழு வில் சேராதிருப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் ஒரு வாதமாகும். அவ்வாறாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நம் பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள் வதே அரங்கத்தின் பொறுப்பாகும்.

அவ்வாறிருக்க, அதிகாரப்பரவ லாக்கல் முறையையே ஒழிக்கப் போவ தாக அரசாங்கத்திற்குள் ஜனாதிபதிக்கு சமமான அந்தஸ்திலுள்ளவர்கள் கர் ஜிக்கும் நிலையில் அதிகாரப் பரவலாக் கல் முறையை பலப்படுத்த வேண்டும் என்று கூறும் தமித்தேசியக் கூட்டமைப் புக்குள் தெரிவுக்குழுவில் சேர்வதற் கான நம்பிக்கை உருவாகாது.

எம்.எஸ்.எம்.ஜயூப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்புக்கென தேசிய கொள்கை வெளியீடு

மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்புக்கான தேசியக் கொள்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர மேற்படி கொள்கைகளடங்கிய அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்ததனையடுத்து மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்புக்கான தேசியக் கொள்கை ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டது.

மேற்படி தேசியக்கொள்கை அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சிரேஷ்ட அமைச்சர்கள் செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. மனிதவள வலுவூட்டல், வேலைவாய்ப்பு செயற்பாடு, திறன், அறிவு ஆகியவற்றை அடிப்படைக் கருப்பொருளாகக் கொண்டு மேற்படி தேசியக்கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்துக்கு உந்து சக்தியான மனித வளத்தை உச்ச அளவில் பிரயோசனப்படுத்தி அபிவிருத்தி இலக்கை எட்டும் அரசாங்கத்தின் எதிர்கால நோக்குக்கு உறுதுணையாக இந்த தேசியக் கொள்கை அமையவுள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள், கல்விமான்கள், பல்துறை விற்பன்னர்கள், தொழிற்சங்கத்துறை சார்ந்தோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரதும் கூட்டு முயற்சியில் இந்த தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்கள் செயலகத்தின் தயாரிப்பிலான இந்த தேசியக் கொள்கையின் வெளியீட்டு நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கொள்கை அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தார். (அ-2)

# சன்சீ கப்பலில் கனடா சென்றவர்களில் 20 பேருக்கு மட்டுமே அகதி அந்தஸ்து

(கொழும்பு)

எம்.வீ.சன்சீ கப்பல்மூலம் கடந்த 2010 ஆம் ஆண்டு கனடாவுக்கு சென்ற 492 இலங்கையர்களில் 20 பேருக்கு மாத்திரமே இதுவரையில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கியபோது பாதுகாப்பு அமைச்சர் விக்டோயிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அகதிகளுள் 35 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இரண்டு பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஒருவர் இலங்கைக்கும் மற்றையவர் இந்தியாவுக்கும் நாடு கடத்தப்பட்டனர்.

அத்துடன் 23 பேர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்று கூறப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 414 பேரினதும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கிளிநொச்சி குளங்களில் நீர்மட்டம் உயர்ந்தது

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடுக்குளம் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற குளமாக உள்ளது. இக்குளத்தினுடைய மொத்த நீர்க்கொள்ளளவு 34 அடியாகும். கடந்த 25 ஆம் திகதி இக்குளத்தின் நீர் மட்டம் 9 அடியாக இருந்தது. தற்பொழுது தொடர்ச்சியாக பெய்த மழையின் காரணமாக நேற்று 21 அடி நீர் மட்டம் காணப்பட்டது.

தொடர்ந்து மழை நீடித்தால் இக்குளத்தின் நீர்மட்டம் உயரக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. இதேபோன்று 16 அடி 6 அங்குல கொள்ளளவை உடைய புதுமுறிப்புக்குளம் 6 அடி நீர் மட்டத்தில் இருந்தது. தற்போது பெய்த மழையின் காரணமாக 14 அடி 3 அங்குலமாக நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

தற்போது இக்குளத்துக்கு நீர் பாய்ந்து கொண்டிருப்பதால் இக்குளம் விரைவில் விண் பாயும் நிலையை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் உள்ள ஏனைய குளங்களிலும் நீர் மட்டம் உயர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. (அ-3-254)

# நான்கு மாவட்டங்களிலுள்ள 12 குளங்கள் நிரம்பி வழிந்தன

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக அநுராதபுரம், திருகோணமலை, குருநாகல், மொனராகலை ஆகிய நான்கு மாவட்டங்களிலுமுள்ள சுமார் 12 குளங்கள் தற்போது நிரம்பி வழிவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்வள முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அநுராதபுரம் மாவட்டத்தில் 8 மத்திய தரக் குளங்களும் திருகோணமலை மாவட்டத்தில் இரு குளங்களும் குருநாகல், மொனராகலை மாவட்டங்களில் தலா ஒரு குளத்தின்படி இரு குளங்களும் இவ்வாறு நிரம்பி வழிகின்றன.

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக நாட்டிலுள்ள ஏனைய குளங்களதும் நீர் மட்டம் உயர்ந்து வருகின்றது என்றும் அவர் கூறினார். (அ-2)

# கந்தளாயில் மாணிக்கக்கல்; தங்க ஆபரண சபை ஆய்வு

(கந்தளாய்)

கந்தளாய் குளக்கட்டில் இருந்து மாணிக்கக்கல் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக ஆய்வுகளை ஆரம்பித்துள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வுகளுக்காக விசேட குழுவொன்று கொழும்பிலிருந்து கந்தளாய் பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் பண்டார கூறியுள்ளார். கடும்மழையை அடுத்தே கந்தளாய் குளக் கட்டில் இருந்து மாணிக்கக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் தேசிய் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# அதிவேக நெடுஞ்சாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல்?

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அதிகார சபைக்கு எதிராக நபரொருவர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நெடுஞ்சாலையினூடாக பயணம் செய்யும் போது அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தரம் குறைந்த காப்பெட் போடப்பட்டுள்ளமையே இதற்கு காரணம் என தெரிவித்தே குறித்த நபர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்.

திம்பிரிகஸ்யாய பிரதேசத்தைச் சேர்ந்த சரத் சுபசிங்க என்ற நபரே இவ்வாறு அறிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த நபரின் கார் அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளானதாகவும் காரைத் திருத்துவதற்கு ஒன்றரை இலட்சம் ரூபாவை செலவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தனது கார் விபத்துக்குள்ளானதற்கு நெடுஞ்சாலையில் தரம் குறைந்த காப்பெட் போடப்பட்டமையையே காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அதிகார சபையின் தலைவர் மற்றும் முகாமையாளர் குறித்த நபரின் குற்றச்சாட்டை மறுத்துள்ளதுடன் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஜப்பான் தொழில்நுட்பத்திலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். (அ-2)

# பிரமந்தனாறு வீதியிலுள்ள பாலம் புனரமைக்கப்படவில்லை

## மக்கள் குற்றச்சாட்டு

(ஆனையிறவு)

பிரமந்தனாறு பிரதான வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள பாலம் புனரமைப்புக்காக தோண்டப்பட்ட நிலையில் புனரமைக்கப்படாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அத்துடன் இதற்குப் பதிலாக வேறு பாதையால் பயணம் செல்வதற்கேற்ற ஒழுங்குகளும் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் நீண்ட தூர பாதையையே பயன்படுத்த வேண்டியுள்ளது. நேரம் விரயமாவதுடன் நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நீண்ட தூர பாதையால் பயணிப்பதால் பாடசாலை மாணவர்களும் பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு தோண்டப்பட்ட பாலத்தை புனரமைக்க முன்வர வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-264)



கரிபியன் கடலில் தோன்றிய சண்டி சூறாவளியினால் அமெரிக்காவின் நியூயோர்க், வோஷிங்டன், நியூஜெர்சி, மன்ஹட்டன் உள்ளிட்ட 13 மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா தனது வரலாற்றின் மிகப்பெரிய சூறாவளியைச் சந்தித்துள்ளது. இந்த சூறாவளி காரணமாக 60 மில்லியனுக்கும் அதிகமான பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சூறாவளியால் பெரும் அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ள நியூயோர்க் நகரம் சினிமாப் படமொன்றை ஒளிப்பதிவு செய்வதற்காக இயற்கை சீரழிவுகள் அடங்கிய காட்சிகளை காட்சியமைத்திருப்பது போல தென்படுவதாக வெளிநாட்டு செய்திகள் விபரித்துள்ளன. இதில் பாதிக்கப்பட்ட சில பகுதிகளைப் படத்தில் காணலாம்.

# அரியம் எம்.பி. அமெ.விஜயம்

(மட்டக்களப்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கடந்த 29 ஆம் திகதி அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நியூயோர்க்கில் இடம்பெறும் தமிழ்ச் சங்கத்தின் 35 ஆவது வருட நிறைவு தின நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக கலந்து கொள்வதற்காகவே அவர் அமெரிக்கா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் அவர் ஏழு நாட்கள் தங்கியிருக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாலரின் உடல்நலமும் விளையாட்டும்

மனிதரின் வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளையும் சூழலையும் அமைத்த ற்கு சாதாரண கல்வியைப் போன்று தேகாப்பியாசக் கல்வியும் உதவுகின் றது.

ஒருவன் சிறந்த முறையில் சீவிப் பதற்கும் அரிய சேவைகள் செய் வதற்கும் பக்குவம் உடையோனா தலுக்கு இக்கல்வி அவசியமானது. இது அவயவங்களின் சக்தியை விருத்தி செய்கின்றது. தசைநார்க ளுக்கு வலிமையைக் கொடுக்கிறது. இதனைச் சரியான முறையில் கையா ள்வதனால் தேகாரோக்கியமும் திருப்தியும் ஏற்படுவதோடு சரியான மனோநிலையும் நல்வாழ்வும் உண் டாகும். இவற்றால் சந்தோஷம்; வல் லமை, ஒழுக்கம் என்பன கிட்டுகி றது.

உடற்கல்வியானது ஒருவனை உயர்ந்த வாழ்வு வாழவும் சிறந்த கட மையுணர்வுடன் கடமையாற்றவும் வழியமைக்கிறது. புத்திக்கூர்மைக் கும் இக்கல்வியே உறுதுணை புரி கிறது. கூன் முதலாகிய உறுப்புச் சிதைவுகளுக்கும் கண்பார்வைக் கோளாறுகள், கூச்சவுணர்ச்சி ஒழுங் கான தசையமைப்பில்லாத உடல் இவை போன்ற உடற்குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் உடற்கல்வியும் விளையாட்டும் உறுதுணை புரி வதை அவதானிக்கலாம்.

தேகாரோக்கியமும் சரியான மனோநிலையும் வல்லமை, ஒழுக் கம் என்பனவும் பாலர்களின் கல் விக்கு முறையான அத்திவாரமாகக் கொள்ளப்படத்தக்கன. சரியான உடற்பயிற்சியுடன் கதையை ஒட்டிய விளையாட்டுக்கள், பாலர்களுக்கு அறிவையும் நடிப்புத் திறனையும் தேகப்பயிற்சியையும் கொடுக்கின் றன. பாலர்கள் எதைப்பார்கின்றார் களோ அதன்படி நடக்கும் சுபாவமுள் ளவர்களாய் இருப்பார்கள். அவர் களுக்கு பாடசாலையில் கற்பிக்கப் படும் கதைகளை நடிக்கச் செய்வ தால் அச்சுபாவத்தைப் பின்பற்ற வைக் கலாம்.

ஒவ்வொரு பிள்ளையும் கதையை ஒட்டிய விளையாட்டுக்களை நடிப் பதனால் தன்னைச் சுற்றியுள்ள சூழ லின் தன்மையை நன்கு அறிந்து கொள்கின்றது. வீடு, அயல் பாட சாலை என்னும் இடங்களில் என்ன நடக்கிறதோ அதையேதான் அவர் களும் நடிக்கின்றனர். பாலர்களு டைய கல்விக்கு காலத்துக்கேற்ற விளையாட்டைத் தேர்ந்தெடுத்து நடிக்கவைப்பது நல்ல பயனைக் கொடுக்கிறது. பிள்ளைகள் சுறு சுறுப்பாகவும் தன்னிச்சையாகவும் இயங்குவதற்கு இந்த நடிப்பு மூலக் கல்வி உதவி செய்கிறது.


பாலர்களது விளையாடும் இயல் பினை கல்விப்பக்கம் இழுத்து நல் வழிப்படுத்தலாம். விளையாட்டு மூலம் கல்வி அபிவிருத்தி செய்வது சுலபம். ஓடி விளையாடுவது, பந்து விளையாட்டு போன்ற விளையாட் டுக்கள் அவரது உடல், உள ஆற்றல் களை வெளிப்படுத்துகின்றன. அவ ரவர் புத்திக்கூர்மைக்கு ஏற்பவும் பல வகையான விளையாட்டுக்கள் அவ ர்களிடமிருந்து வெளிப்படுகின்றன.

ஒரு குழந்தையானது தான் பிறந்த கையுடனேயே தன்கையைக் காலை அசைத்து இயல்பாகவே விளை யாடத் தொடங்குகிறது எனலாம். அப்படிப்பட்ட குழந்தை வளரும் பரு வத்தில் பல்வேறுபட்ட விளையாட் டுக்களை விரும்பி விளையாடத் தொடங்குவதில் அதிசயம் எதுவும் இல்லையென்றுதான் கூறவேண்டும்.

விளையாட்டு மூலம் பாலர்களு க்கு ஓர் ஒழுங்கு நிறைந்த தன்மையை உணரமுடிகிறது.

உதாரணமாக வட்டப் பந்தாட்டம் என்னும் விளையாட்டை எடுத்துக் கொள்ளலாம். இவ்விளையாட்டுக்கு ஐந்து அல்லது ஆறு பந்துகள் தேவை. இருவருக்கிடையில் இரண்டு அல்லது மூன்று அடி இடைவெளி விட்டு பிள்ளைகள் வட்டமாக நிற்க வேண் டும். ஒருவன் பந்துகளை ஒன்றன் பின் ஒன்றாக ஊதுகுழல் ஊத கடத்து வான். ஒழுங்கின் பிரகாரம் பந்துகள் தரையில் விழாமல் துரிதமாய்க்கடத்த வேண்டும். பந்தைத் தவறவிட்டவர், தவற விடச்செய்தவர் உட்பட இருவ ரும் ஆட்டத்திலிருந்து விலகிக் கொண்டு வரவேண்டும். கடைசிவரை விலகாதவனே வெற்றிவீரனாவான்.

இவ்விளையாட்டில் ஒவ்வொரு பிள்ளையும் சம அளவில் இடை



வெளி விட்டு நிற்கின்றனர். ஊதுகு ழலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உடனடியாகச் செயலாற்றத் தொடங்கு கின்றார்கள். பந்துகள் தரையில் விழா மல் கவனித்துப் பிடிக்கப்படுகி ன்றன. தவறாக ஆடியவர் தாமாகவே ஆட்டத்திலிருந்து விலகுகிறார். கடைசிவரை விலகாத வெற்றிவீரன் கதாநாயகனாகிறான். அடுத்த தடவை தாமும் ஒரு வெற்றி வீரனாக வேண் டுமென ஒவ்வொருவரும் நினைக்கின் றனர். இவையெல்லாம் இவ்விளை யாட்டில் காணப்படும் ஒழுங்கு முறை களாகும். இவ்வொழுங்கு முறைகள் ஒவ்வொரு பாலரின் உள்ளத்திலும் வளரப்போகும் வித்தாகப் பதிவாகின் றன.

கதையை ஒட்டிய விளையாட்டுக் களைப் பிள்ளைகள் விளையாடும் போது அவர்களுக்கு நன்கு தெரிந்த கதை களாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக தொப்பி வியாபாரி எடுத்துக்கொள்வோம். சிறுவர்கள் பாடசாலைக்கு அணிந்துவரும் தொப் பிகள் அனைத்தையும் மூடையாகக் கட்டிக்கொள்ளலாம். ஒரு மாணவன் தொப்பி வியாபாரி போல அம்மூடை யைத் தலையில் வைத்துக் கொண்டு தொப்பி வேண்டுமா தொப்பி என்று கூறியபடி சுற்றிவர அவர் தானும் ஒரு தொப்பியை அணிந்துவரவேண் டும். பின் அவர் களைப்பினால் ஒரு மரத்தின் கீழ் மூடையை வைத்து விட்டு சாய்ந்து உறங்குவதுபோல் உற ங்கவேண்டும். மிகுதி மாணவர்கள் எல்லோரும் குரங்குகளாக மரத்திலி ருந்து குதிப்பதுபோல் குதித்து இறங்கி அந்த வியாபாரி அணிந்திருப்பது போலப் பார்த்து தாமும் ஒவ்வொரு தொப்பியாக எடுத்து அணிந்து கொள்ளவேண்டும். பின்பு மரமேறிக் குந்திக்கொண்டிருப்பதுபோல ஒவ் வொரு இடமாகக் குந்தியிருக்க வேண் டும். வியாபாரி கண் விழித்ததும் தொப் பிகளைக் காணாமல் அங்குமிங்கும் தேடுவான். குரங்குகளின் சத்தம் கேட்கவேண்டும். வியாபாரி அப் போதுதான் அவற்றைப் பார்ப்பது போல பார்ப்பார். வியாபாரி தா... தா... என்பது போலக்கையை நீட்டு வார். குரங்குகளும் தா... தா... என் பது போல கைகளை நீட்டும் வியா பாரி நன்றாக யோசிப்பார். குரங்குகள் செய்வதைச் செய்யும் தன்மையுள்ளன என்பதால் தன் தொப்பிகளைக் கழ ற்றி அவர் எறிந்து காட்டுவார். குர ங்குகளும் தத்தமது தொப்பிகளைக் கழற்றி எறியும். வியாபாரி மகிழ்ச்சி யான முகபாவனையுடன் தொப்பிக ளைப் பொறுக்கியெடுத்துக் கட்டிக் கொண்டு தொப்பி வேண்டுமா தொப்பி என்று கூவிக்கொண்டு செல்வார்.

இவற்றையெல்லாம் ஆசிரியர் முதலில் நடித்துக்காட்டவேண்டும். எல்லாப் பிள்ளைகளும் விளையாடும் படி உற்சாகப்படுத்தவேண்டும். இவ் வகையான விளையாட்டுக்கள் மூலம் பாலர்கள் தொப்பி வியாபாரியின் கதையை அனுபவபூர்வமாக அறிகின் றனர். கதை அவர்கள் மனதில் பசு மரத்தாணி போல் பதிந்துகொள்ளும். சமயோசிதபுத்தி, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலுதல் என்பன இக் கதை மூலம் அவர்தம் மனதில் பதி வாகின்றன. இப்படியே ஒவ்வொரு கதையாக நடிக்கப்படும் போது அக் கதையின் சிறப்பியல்புகள் அவர் மனதில் பதியப்படுகின்றன.

ஒரு தாயின் அன்பான பராமரிப்பி லேயே ஒரு குழந்தையின் உடல் ஆரோக் கியம் தங்கியுள்ளது. சுத்தம் சுகம் தரும் என்பதற்கிணங்க குழந்தையை சுகா தார நெறிகளுக்கமைய வளர்த்தெடுத் தல் அவசியமாகிறது. அசுத்தத்தினால் உண்டாகும் கிருமித்தொற்றுகளால் குழந் தையின் உடல் நலம் பாதிப்படையும். கொதித்தாறிய நீரைப் பருகக் கொடு த்தல், நகங்களை வெட்டி விரல்களை சுத்தமாகப் பேணுதல், போசாக்கான உண வளித்தல் என்பன ஒரு குழந்தையின் ஆரோக்கிய வாழ்விற்கு உகந்ததாகும்.

முட்டை, பால், மரக்கறி என்பவ ற்றை குழந்தைகளின் உணவில் தாராள மாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். வளரும் குழந்தைகளுக்கு புரதச்சத்து நிறைந்த உணவு வகைகள் அத்தியாவ சியமானவை. இன்னும் மீன் எண்ணெய், தோடம்பழம், எலுமிச்சம் சாறு என்ப வற்றை கொடுப்ப தன் மூலம் தேவை யான உயிர்ச்சத்துக்களையும் அவர்க ளுக்கு அளிக்கலாம்.

குழந்தைகளின் ஆடை, அணிகளை சுத்தமாகப் பராமரிப்பதும் குளியல் போன்றவற்றை ஒழுங்காக கடைப் பிடிப்பதும் சரியான சுகாதார முறை களாகும். மலசலகூடப் பாவனையின் பின் சவர்க்காரம் இட்டு கைகழுவுதலை கற்றுக்கொள்ள வேண்டும். குடும்ப அங்கத்தவர் அனைவருமே இம்முறையினை தவறாமல் கடைப் பிடிக்க வேண்டும். குழந்தையின் வயிற்றில் ஏற்படும் பூச்சித் தொல் லைகளை வைத்தியரின் ஆலோ சனைகளுடன் கூடிய தகுந்த மருந் துகளை கொடுத்து அகற்றுதல் வேண்டும். மூன்று வயதுக்குட்ப ட்ட பிள்ளைகள் தாய் அரவணைப் பிலும் ஆறு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலையிலும் இடை வயதுப்பிள்ளைகள் பாலர் பாடசாலையிலும் உள்ளன. பாலர் பாடசாலையின் பாலர்கள் ஆசிரிய ரின் அன்பான அரவணைப்பில் இருக்க வேண்டியவர்கள். பிள்ளை கள் வளர்ப்பில் நாம் கவனம் எடு ப்பது நம் இனத்துக்கும் தேசத்து க்கும் உரிய அரிய சேவையாகும். இதை இயற்றுதல் வயது வந்தோர் அனைவரதும் கடமையாகும். உண்மையில் ஒரு குழந்தையினு டைய வளர்ப்பு நாட்டையே வளர் ப்பதாகும்.


உடற்கல்வி என்பது நற்பழக்கத் தையும் கீழ்ப்படிதல், தன்னம் பிக்கை, தன்னடக்கம், மரியாதை, ஒத்துழைப்பு, நட்பு, வைராக்கியம், நேர்மை, நியாயம், தன்கட்சியைப் பற்றிய பெருமை, சுறுசுறுப்பு, முன் யோசனை, தைரியம் முதலிய நற் குணங்களையும் உண்டு பண்ணு கின்றது. இதனால் இரத்தோட்டம், நரம்புப்பலம், இயல்பான சுவாச ப்பை அமைப்பு என்பன உருவா கின்றன.

பாலருக்குரிய கழுத்தப்பியாசம், கை அப்பியாசம், கால் அப்பியா சம், இடுப்பு 'அப்பியாசம், சுவாச அப்பியாசம் மற்றும் முழு உடம்பு அப்பியாசங்களையும் தேர்ந் தெடுத்து செய்வித்தல் வேண்டும். வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னால் இவற்றை செய்விப்பது அவர்கள் உற்சாகமாக கல்வி கற்பதற்கான ஆரம்ப நிலையாக அமையும். அணி நடை செய்வித்தல், அவர்களுக்குள் ஓர் ஒழுங்கு முறையினை ஏற்படுத் தும். ஊஞ்சல், சறுக்கு மரம் போன்ற விளையாட்டுக்கள் உடல் நலத்து டன் அவர்களை குதூகலிக்கவும் வைக்கும்.

ஒரு மனிதனது உடல் வலிமை யும் மன வலிமையுமே அவனது சகல திறமைகளையும் நிர்ணயிக்கின்றன. அந்த வகையில் அவற்றுக்கு ஆக்க சக்தியாக இருப்பது தேகாஅப்பி யாசமே. தேகா அப்பியாசங்கள் மூலம் தசை நார்கள் வலிமையுற்று உட லின் அங்கங்கள் யாவும் வலுவுறு கின்றன. பாடசாலை வாழ்க்கை இயற்கை யோடு சம்பந்தப்பட்டதா கவும் தேகாரோக்கியத்தைக் கொடுக் கக்கூடியதாகவும் இருக்க வேண் டும். அதனால் பாலர்களுக்கான பாடத் திட்டத்தை அமைக்கும் போது தேகா அப்பியாசத்தையும் அவற்றுள் ஒன்றாக கொள்ளல் மூலம் அவர்க ளது கல்வி நிலையின் வளர்ச்சியை உறுதிசெய்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இலங்கை வங்கியின் சிறிய நடுத்தர வியாபாரத்துறையினருடன் வெற்றிகரமான நீண்டபயணம்


வாடிக்கையாளர் பயிற்சி நிகழ்ச்சி - மட்டக்களப்பு


சிறிய நடுத்தர தொழில் நிலையம் திறப்பு விழா புத்தளம்


வடக்கில் மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்


வடக்கில் மக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள்




உங்கள் வசதிக்கேற்ப வங்கியியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்

## இலங்கை வங்கி நல்லூர் விரிவாக்கற் காரியாலயம்

**பருத்தித்துறை, யாழ்ப்பாணம் (நல்லூர் கோவிலுக்கு எதிரில்)**

என்ற முகவரியில் 2012 நொவம்பர் மாதம் 01ம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

www.boc.lk | தலைமை அலுவலகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+ (lka)

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## வடக்கில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தைக் பிரகடனப்படுத்துவதுடன், புதிதாக ஈட்டப்பட்ட சமாதானத்தையும், சாந்தியையும் கொண்டாடுகின்றது

## யாழ்ப்பாணம் சிறிய, நடுத்தர வியாபார முயற்சி (SME) வங்கிச்சேவை அலகு

**2012 நொவம்பர் 01 அன்று**
**இல.754, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்**
**சிநவி வங்கிச்சேவை அலகு**
**திறந்து வைக்கப்படுவதை அறிவிப்பதையிட்டு**
**நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.**







*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் !*

சிநவி வங்கியியல் பிரிவு, இலங்கை வங்கி தலைமை அலுவலகம், கொழும்பு 01 தொ.பேசி: 011 2204560
வட மாகாண அலுவலகம்: 021 2223126

591 கிளைகள்/ விரிவாக்கற் காரியாலயம் | 436 ATMகள் | 857 வெளிநாட்டு தொடர்பிலான நிலையங்கள் | 24 x 365 தலைமை அலுவலகக் கிளை | 24 x 7 அழைப்பு நிலையம் | நடமாடும் தொலைபேசி வங்கிச் சேவை | இணையதள வங்கிச் சேவை | SMS எச்சரிக்கை சேவை | SME நிலையங்கள் | முதன்மை நிலையம்

www.boc.lk | தலைமை அலுவலகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 | அழைப்பு நிலையம் (+94) 011 220 4444 | Fitch Rating AA+ (lka)

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம நீதியரசருக்கு எதிரான

# குற்றங்களை ஆராய்வதற்கு தெரிவுக்குழுவில் பங்கேற்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றங்களை ஆராய்வதற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்படவுள்ள . நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி இணைந்து கொள்ளும்என தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக குற்ற பிரேரணையை கொண்டு வருவது தொடர்பிலான செயன்முறைகள் பற்றி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் ஆராய்ந்துள்ளது.

குற்றப் பிரேரணையில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கையொப்பமிட்டிருந்தால் குற்றப் பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொள்வார்.

இதன் பின்னர் அவர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக தெரிவுக்குழு நியமிக்கப்படும்.

ஏழு பேர் கொண்ட அந்த தெரிவுக்குழுவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த நால்வரும் எதிரணியை சேர்ந்த மூவரும் அங்கம் வகிப்பர். நாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கமாட்டோம். நீதிமன்றத்தின் சுதந்திரத்துக்காக குரல் கொடுப்போம்.

எங்களுடைய எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கே இந்த தெரிவுக் குழுவில் பங்கேற்கவுள்ளோம் என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நேற்று முன்தினம் கூடிய கட்சியின் செயற்குழு கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது எனவும் அக்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-2)

# தொழில்சார் வேலைவாய்ப்புக்கு நாட்டில் சிறந்த கேள்வி உண்டு

## அமைச்சர் டியூ தெரிவிப்பு

தொழில்சார் வேலைவாய்ப்புக்கு நாட்டில் சிறந்த கேள்வி உள்ள போதும் கல்வித் திறன் மிக்க மனித வளம் பற்றாக்குறையே குறைபாடாக உள்ளதென சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

மனிதவளம் மற்றும் வேலை வாய்ப்புக்கான தேசிய கொள்கையின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் தொடர்ந்து அமைச்சர் கருத்து தெரிவிக்கையில் ,

பதினொரு வீதமானவர்கள் உயர் கல்வியை தொடர பணப் பிரச்சினையே முக்கிய காரணமாக அமைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவையின் தீர்மானத்திற்கமையவே இந்தத் தேசியக் கொள்கை தயாரிக்கப்பட்டது.

இதில் சகலதுறை விற்பன்னர்கள், கல்விமான்களது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது ஆகும். சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், உலக தொழிலாளர்கள் அமைப்பின் கருத்துக்களுக்கும் இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இந்த தேசிய நிகழ்வுக்கு ஜெனீவா, புதுடில்லி உட்பட பல சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும் வருகை தந்துள்ளனர்.

இலங்கையின் பொருளாதார மதிப்பீடு 59 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளபோது சகல நாடுகளையும் உள்ளடக்கிய உலகின் பொருளாதார மதிப்பீடு 65 ஆயிரம் பில்லியன் அமெரிக்கன் டொலராகவே உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் உச்ச பிரயோசனத்தை பெறுவதன் மூலமே பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகியுள்ளது. இலங்கை அபிவிருத்தி மனித வளத்திலேயே தங்கியுள்ளது. சமூக அபிவிருத்தி கூடுதல் வளர்ச்சி கண்டுள்ளதால் நிறைவான மனித வளத்தைப் பெறுக் கொள்ள முடிந்துள்ளது. இது நிலையான பொருளாதாரத்திற்கு உறுதுணையாகவுள்ளது.

விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி இலக்கை இலங்கை அடைவதற்கு மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டம் வழிகாட்டுகிறது. இதன் மூலம் அமைச்சுக்களின் சிறந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிகிறது.

இலங்கையின் தொழிற்படை 8 மில்லியனாக உள்ளது. ஒப்பீட்டளவில் இது மிகவும் குறைவானது. இதனால் அபிவிருத்தியடையாத பிரதேசங்களில் வேலை வாய்ப்புக்கான வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

தொழில் படையினரை பொறுத்த வரையில் கல்வியில் அவர்களின் தகைமை திருப்திகரமானதாக இல்லை. கல்விப் பொதுத்தராதரத்தைப் பொறுத்தவரையில் அதில் சித்தியடையாதவர்களே தொழில் படைகளுக்குள் உள்வாங்குகின்றனர். (அ-2)

## கண்டியில்

# கடும் மழையில் 261 பேர் காயம்

கடந்த சில தினங்களாக கண்டி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வருகின்ற கடும் மழையினால் 261 பேர் காயங்களுக்குள்ளாகி இருப்பதுடன் 54 வீடுகள் சேதமடைந்திருப்பதாக கண்டி மாவட்ட அரசாங்க அதிபர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

உடுநுவர, ஹாரிஸ்பத்துவ, கங்கவட்ட கோரளை ஆகிய பிரதேசங்களிலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# ஆஸியில் இருந்து நாடு கடத்தப்படவிருந்த இலங்கை தமிழர் தற்கொலைக்கு முயற்சி

அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்படவுள்ள இலங்கை தமிழர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரை நாடு கடத்தக்கூடாது என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இறுதி நேர சட்ட நடவடிக்கைகளும் தோல்வியில் முடிவடைந்தன.

இதனையடுத்து 42 வயதான குறித்த இலங்கை தமிழர் அவுஸ்திரேலியாவி லிருந்து நாடு கடத்தப்படவிருந்த நிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் அவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

தற்கொலை முயற்சியை அடுத்து றோயல் மெல்போர்ன் வைத்திய சாலைக்கு அழைத்து செல்லப்பட்ட அவர் சிகிச்சைக்கு பின்னர் மீண்டும் மார்பு நோய் தடுப்பு சிறைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அங்கு கூடிய 50 இற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த இலங்கை அகதி நாடு கடத்தப்படக்கூடாது என்று கோசமிட்டனர்.

எனினும் இதனை அவுஸ்திரேலிய அதிகாரிகள் கருத்திற் கொள்ளவில்லை.

இதேவேளை தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த போது குறித்த இலங்கை தமிழருக்கு பாரதூரமான காயங்கள் எவையும் ஏற்பட வில்லை என்றும் அவுஸ்திரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# பதவியை இராஜினாமா செய்தார் அமைச்சர் செந்தில் தொண்டமான்

ஊவா மாகாணசபையின் அமைச்சர் செந்தில் தொண்டமான் பதவி விலகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிற்கு போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால் முதலமைச்சர் சசீந்திர ராஜபக்சவுடன் செந்தில் தொண்டமான் முரண்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊவா மாகாண ஆளுநர் நந்த மெத்யூவிடம் செந்தில் தொண்டமான் தமது இராஜினாமா கடிதத்தை ஒப்படைத்துள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றன.

பிரதேசத்தின் பெருந்தோட்ட அபிவிருத்திக்காக ஒரு மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு செந்தில் தொண்டமான் முதலமைச்சர் சசீந்திரவிடம் கோரியுள்ளார். எனினும் இந்த கோரிக்கையை முதலமைச்சர் நிராகரித்துள்ளார். (அ-2)


# ஏமாற்று பேர் வழிகள் இருவர் கைதாகினர்


(கொழும்பு)


புற்றுநோயாளர் ஒருவருக்கு சிகிச்சையளிப்பதற்கென பொய் கூறி சட்டவிரோதமான முறையில் பொதுமக்களிடம் நிதி சேகரித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய இரண்டு பெண்களை கதுருவெல நகரில் வைத்து கைது செய்துள்ளதாக பொலனறுவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் துமிந்து சேனாநாயக்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இரு பெண்களும் குருநாகல் பகுதியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களாவர். புற்றுநோய் ஏற்பட்டவரின் சகோதரியாகவும் நெருங்கிய உறவினராகவும் தம்மை இனங்காட்டிக் கொண்டு புற்றுநோயாளரைக் குணப்படுத்துவதற்கு தேவையான நிதியை சேகரிப்பதாகக் கூறிக்கொண்டு நகரங்கள்தோறும் நிதி சேகரிப்பதில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இருபது ரூபா மற்றும் ஐம்பது ரூபா டிக்கட்டுக்களை விற்பனை செய்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்த குறித்த இரு பெண்கள் தொடர்பாகவும் பொலனறுவை பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கதுருவெல பகுதியில் நிதி சேகரிப்பதில் ஈடுபட்டு வந்த இருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர். (அ-2)







ACCA இலங்கை கற்கை வழிகாட்டல் அலகு யாழ்ப்பாணம் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ACCA கற்கையின் 3 ஆம் ஆண்டு கற்கை நிறைவினை முன்னிட்டு விருது வழங்கும் நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட எச்.எஸ்.பி.சி.வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் அ.சி.அரவிந்தன் உரையாற்றுவதையும் தங்கப் பதக் கத்தினைப் பெற்றுக் கொண்ட சிறிஜீவினி திரவியச்செல்வம், உமையாள் இராமநாதன் ஆகியோர் பிரதம விருந்தினரால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியை ஏமாற்றலாம். ஆனால் மனச்சாட்சியை ஏமாற்ற முடியாது.

~ ஸ்டாஸ்லாஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கால் கழற்றப்படும் என்பதற்காக புண்ணுக்கு மருந்து கட்டாமல் விடுவதா?

ஏழ்மையோடு விளையாடும் இயற்கையின் சீற்றம் ஒருபுறம்.

மழை வரும் முன்னர் வீட்டுக் கூரைகளை செப்பனிடத் தெரியாத அறியாமை இன்னொரு புறம். வெள்ளம் ஏற்பட்டால் மழை நீர் வடிந்தோட வடிகால் தேவை என்பதை உணராத அரச அமைப்புகள் மறுபுறமாக, எல்லாமும் சேர்ந்து எங்கள் வாழ்வை வெறுப்புக்குள்ளாக்கி விடுகின்றன.

நிலைமை இதுவாக இருக்க, வீதிப்புனர் அமைப்பின் காரணமாக பயணத்தின் போது ஏற்படுகின்ற மிக மோசமான அசௌகரியங்கள், துன்பப்பட்டுத்தான் மோட்சத்தை அடைய வேண்டும் என்பதை நிரூபிக்கின்றன.

அகலிக்கப்பட்டு புனரமைக்கப்படுகின்ற வீதிகளில் ஏற்கெனவே இருக்கக் கூடிய குன்று குழிகள் தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதாக இல்லை.

உதாரணமாக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அகலிப்பும் புனரமைப்பும் நடந்து வருகின்றது.

இவ்வாறு புனரமைப்புப் பணி நடக்கிறது என்பதற்காக அந்த வீதியில் இருக்கக் கூடிய குன்று குழிகளை திருத்தம் செய்யாமல் விடுவது மகாதவறு.

வீதி அகலிப்பாக்கப்படுகின்ற பணி நடைபெறுகின்ற அதேநேரம் அந்த வீதியால் இலகுவான போக்குவரத்து இடம்பெறும் பொருட்டு, வீதியில் சேதமடைந்த பகுதிகள் திருத்தம் செய்யப்படுவது கட்டாயமானதாகும்.

வீதி அகலிப்புக்காக எடுக்கக் கூடிய காலம் நீண்டதாக இருக்கலாம்.

அதேநேரம் அந்த வீதியில் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது எனில், குன்று குழிகளில் விழுந்து எழும்புகின்ற வாகனங்களின் நிலைமை எப்படியாக இருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

அதேநேரம் தற்போது இருக்கக் கூடிய மழைகால நிலைமையில் வெள்ளத்தில் வீழ்ந்து பயணிகள் தங்கள் உயிரை முடித்துக் கொள்கின்ற பரிதாபமும் ஏற்பட வாய்ப்புண்டு.

ஒருவருக்கு காலில் புண். அந்தக் காலை சத்திர சிகிச்சை மூலம் அகற்ற வேண்டும் என மருத்துவர்கள் முடிவு செய்கின்றனர்.

எனினும் அந்தக்காரியத்தை செய்வதற்கு சிறிது காலம் எடுக்கும்.

கால் அகற்றுவது உறுதியாகிவிட்டது என்பதற்காக அந்தக் காலில் இருக்கக் கூடிய புண்ணுக்கு மருந்து கட்டாமல் விடுவது என்பது ஏற்புடையது அன்று.

கால் கழற்றுவதாக இருந்தாலும் புண்ணுக்கு மருந்து கட்டுவது கட்டாயம். அவ்வாறு செய்யாவிடில் அது சம்பந்தப்பட்ட நோயாளிக்கு வேறுவிதமான பாதிப்பை கொடுக்கலாம்.

எனவே கழற்றப்படவிருக்கின்ற கால் புண்ணுக்கு மருந்து கட்டுவது போன்று, வீதி முழுமையாக திருத்தி அமைக்கப்படுவதாக இருந்தாலும் வீதிகளில் இருக்கக் கூடிய குன்று குழிகளை ஏனும் திருத்தம் செய்வது கட்டாயமானதாகும். நடக்குமா?

# அமெ.வில் சாண்டி புயலால் தாக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிவாரணம் வழங்கவும்

## சவேந்திர சில்வாவுக்கு ஜனாதிபதி பணிப்பு

அமெரிக்காவைத் தாக்கியுள்ள சாண்டி புயலால் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குமாறு நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

அமெரிக்காவை அச்சுறுத்திவரும் சாண்டி புயல் அங்குள்ள கிழக்கு கடலோரப் பகுதியை நாசப்படுத்தியுள்ளது. இந்தப் புயலால் 15கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அட்லாண்டிக் பெருங்கடலில் உருவான சாண்டி புயல் அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரை பகுதிகளில் 130 கிலோமீற்றர் வேகத்தில் கரையைக் கடந்தது. அப்போது பலத்தகாற்று வீசியதுடன் கனமழையும் பெய்தது. சுமார் 14 அடி உயரத்திற்கு அலை எழும்பியதால் கடல்நீர் நகரங்களுக்குள் புகுந்தது.

சாண்டி புயலால் நியூயோர்க், நியூஜேர்சி, பென்சில்வேனியா, மேரிலாண்ட் உட்பட 12 மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தலைநகர் வாஷிங்டன், பால்ட்டிமோர், பிலடெல்பியா உள்ளிட்ட நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. புயல் கரையைத் தொட்ட அட்லாண்டிக் சிட்டியில் நிலைமை மிக மோசம்.

சாண்டி புயல் அமெரிக்காவில் இதுவரை 39பேரை பலி கொண்டுள்ளது. சுமார் 5 கோடி பேரின் அன்றாட வாழ்க்கையை கடுமையாகப் பாதித்துள்ளது.

80 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. அமெரிக்காவின் வடகிழக்கு கடலோர நகரங்களில் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

உலகில் அதிகம்பேர் பயன்படுத்தும் நியூயோர்க்கில் உள்ள கென்னடி சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது. இதனால் ஏர் இந்தியா உட்பட சுமார் 15 ஆயிரம் விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. 125 ஆண்டுகளுக்குப் பின்பு தற்போது நியூயோர்க் பங்குச் சந்தை தொடர்ந்து இரண்டாவது நாளாக செயற்படவில்லை.

இதுவரை சுமார் இரண்டரை இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு சேதத்தையும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியுள்ள சாண்டி புயல் அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் மேலும் பாதிப்பை உருவாக்க வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க சூறாவளி கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் மக்களுக்கு சீரான எரிபொருள் விநியோக சேவையை வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# இராணுவத்தை எதிரிகளாக பார்த்த நிலை மாறியுள்ளது

## யாழ்.மாநகர முதல்வர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரை எதிரிகளாகப் பார்த்த தமிழ்மக்கள் தற்போது அவர்களிடம் உதவிகளைப் பெற்றுக்கொள்வதோடு சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தின் சமூக நலத் திட்டத்தின் கீழ் யாழ்.சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் வைத்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளில் பெற்று சித்தியடைந்த யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் எல்லோரும் இலங்கையர்கள் என்ற உணர்வுடன் வாழவேண்டும். மத, மொழி, இன வேறுபாடுகள் எமக்கு ஏற்படக்கூடாது.

எமது நாட்டில் இருப்பதுபோன்று உலகில் வேறெந்த நாட்டிலும் இலவசக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.


இலவசக் கல்விக்காக பெருந் தொகை பணத்தை எமது அரசாங்கம் செலவிடுகின்றது. எனவே இலவசக் கல்வியூடாக நாம் பெரும் அறிவை எமது நாட்டிற்கே அர்ப்பணிக்கவேண்டும். அரசாங்கத்திற்கு நன்றி விசுவாசத்துடன் வாழ வேண்டும்.

மேலும் போர்க்காலத்தில் இருந்ததை விட தற்போது பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இராணுவத்தினரை எதிரிகளாக பார்த்த சூழ்நிலை முற்றுமுழுதாக மாறிவிட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சத்திய தரிசனம்



துயர்களைத் தீர்க்க பிரார்த்தனைதான் சிறந்த மருந்து. இந்த உலகில் பிரார்த்தனையால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. பிரார்த்தனை என்பது மிகக் கடினமான இதயங்களையும் இளகவைக்கும் முழுமையான மனதுடன் லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து எனப் பிரார்த்தியுங்கள். உங்களது குடும்பத்திற்காக மட்டும் பிரார்த்தனை செய்யாதீர்கள். இத்தகைய குறுகிய மனப்பான்மை கொண்ட பிரார்த்தனைகள் வெறும் வீணானவை. உங்களது பிரார்த்தனைகள் உலகின் அனைத்து நாடுகளிலும் இருக்கும் மக்கள் அனைவருக்குமாக இருக்கட்டும்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கோயில் தரிசனத்தின் போது ஆண்கள் மேலாடை அணியலாமா?

சில கோயில்களில் தரிசனம் செய்யும்போது ஆண்கள் சட்டை அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆசாரத்தைப் பலரும் ஏளனம் செய்கின்றனர்.

ஆனால் இந்துமத பிராமணத்தின்படி மேல் ஆடைகள் ஆண்கள் அணியாமல் ஆராதிக்க வேண்டும் என விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

கோயில் தரிசனம் செய்யும் போது நாம் மனதில் கொள்வது இறைவன் அருள் நம்மில் வந்து நிறையவேண்டும் என்பதே. கோயில் வாசலுக்கு முன் தெய்வவிக்கிரகத்துக்கும் சமாந்தரமாக வணங்கி நிற்கும் பக்தரில் இறையருள் வந்து நிறையும் என்பது நம்பிக்கை. விக்கிரகத்தின் மூலாதாரம் முதல் எல்லாப் பாகங்களிலிருந்தும் இறைவல்லமை புறப்பட்டு பக்தனின் ஒவ்வொரு பாகத்தையும் நோக்கி வந்து சேர்ந்து ஒவ்வொரு பாகமும் உணர்வடைகின்றன.

இவ்வாறு நாம் படிக்கும் போது பெண்கள் மேல் ஆடைகள் அணிவதுண்டே என்று கேட்கவும் வாய்ப்புண்டு. பெண்களுக்கு கோயில் தரிசனத்துக்கு செல்வதில் எந்தத் தடைகளும் ஆடை அணிவது சம்பந்தமாக இல்லை என்பதன் முக்கிய காரணம் நன்னெறியைப் பாதுகாப்பதுவே. பெண்களின் மேலாடை மூடாமலிருப்பது பெரும் நெறிகேடு என்பதால் அவர்கள் ஆடை அணிவதில் எந்த விதியும் போதிக் கப்படவில்லை.

பிரம்மமுகூர்த்தத்தில் ஈரத்துணி உடுத்து கோயில் தரிசனம் மிக உணர்வளிக்கின்ற ஒன்றாக நாம் அறிந்துள்ளோம். ஈரம் உடலில் உள்ளபோது தெய்வீக உணர்வு பக்தரின் உடலில் குடியேறும்.

பொதுவாக அதிகாலையிலும் மாலையிலும் கோயில் தரிசனம் செய்வது வழக்கம். இந்நேரங்களில் ஆண்கள் மேலாடை இன்றி கோயில் தரிசிக்கவேண்டும் என்பது விதி. உதயசூரியனிலும் மறையும் சூரியனிலும் இருந்து புறப்பட்டு வரும் ஒளிக்கதிர்கள் ஆடை அணியாத உடற்பாகங்களில் பதிந்து விற்றமின் உட்கொள்ள உதவுவது உடல்நலத்துக்கு மிகச் சிறப்பானது என்று விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செவிப்புலனற்றோர் வலைப்பந்தாட்டம்; மட்டக்களப்பு அணி சம்பியன்

வடக்கு, கிழக்கு, மேல்மாகாண செவிப்புலனற்றோரின் மும்முனை வலைப்பந்தாட்ட போட்டியில் மட்டக்களப்பு வாழ்வோசை செவிப்புலனற்றோர் பாடசாலை சம்பியனாகியது.

ரத்மலான செவிப்புலனற்றோர் இரண்டாம் இடத்தினையும் யாழ்ப்பாணம் கைதடி பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

மட்டக்களப்பு யாழ்ப்பாணம் (கைதடி),ரத்மலான ஆகிய செவிப்புலனற்ற இல்லங்களின் மாணவர்களுக்கிடையேயான முக்கோண வலைப்பந்தாட்ட சுற்றுபோட்டி கடந்த 26 ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பரிசளிப்பு விழாவில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாகவும் சமூக சேவைகள் திணைக்கள கிழக்கு மாகாண பணிப்பாளர் என். மணிவண்ணன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

# சிநேகபூர்வ உதைபந்து போட்டிகள் முடிவுகள்

யாழ்.மத்திய கல்லூரி அணிக்கெதிரான சிநேகபூர்வ காற்பந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளில் மானிப்பாய் இந்து கல்லூரி வெற்றிபெற்றது.

மானிப்பாய் இந்து கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையில் மூன்று பிரிவுகளிற்குமான காற்பந்தாட்ட போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

14 வயது பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 2:0 என்ற ரீதியில் மானிப்பாய் இந்து கல்லூரியை வென்றது. 16வயது பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 18 வயது பிரிவினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்து கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# வட்டு.மத்திய கல்லூரி சம்பியன்

சங்கனைக் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் 18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வட்டு. மத்திய கல்லூரி சம்பியனாகியுள்ளது. சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வட்டு. மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணியும் 2:2 என்ற கோல்கள் போட்டன. இரண்டா பாதியாட்டத்தில் இரு அணியினரும் கோல்கள் போட தவறின.

இறுதியில் பனால்டி உதையில் வட்டு மத்திய கல்லூரி 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாம் இடத்தினை வட்டு. இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

# விபுலானந்த ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட போட்டி

விபுலானந்த ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு உடுவில் மகளிர் கல்லூரியும் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடமும் தெரிவாகியுள்ளன.

இப்போட்டி யாழ்.மத்திய கல்லூரியின் ஏற்பாட்டில் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் 19 வயதுப்பிரிவு கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வருகின்றது.

மேற்படி சுற்றுப்போட்டிகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.


முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன. இப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 56:45 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி





பெற்று முதல் அணியாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.இரண்டாவது அரையிறுதி ஆட்டம் திருக் குடும்பம் கன்னியர் மடத்திற்கும் பண்டத்தரிப்பு இராமநாதன் மகளிர் கல்லூரிக்குமிடையிலே நடைபெறவிருந்தது. எனினும் குறித்த நேரத்திற்குள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி வருகை தராததனால் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் கொக்குவில் இந்து கல்லூரியும் மோதின. ஆட்டத்தின் முக்கியமான கட்டத்தில் இலகுவான புள்ளிகள் பெற்ற யாழ்ப்பாணம் இந்து கல்லூரி 58:49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

# தேசியரீதியான பளுதூக்கல் போட்டி; யாழ்.மத்திய கல்லூரி வீரர் தங்கம்

தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற தேசிய மட்ட பளு தூக்கும் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர் இளங்கோவன் சாந்தகோபி 17வயதுப்பிரிவில் 85 கிலோகிராம் பிரிவில் 120 கிலோகிராம் பாரத்தினை தூக்கி தங்கப்பதக்கத்தினை பெற்று சாதனை படைத்தார். கடந்த வருடம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பளு தூக்கும் அணியினரை யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்தது. கல்லூரி ஆசிரியர் சுகிதனால் ஆரம்பிக்கப்பட்டு முதன்முதலாக தேசிய மட்ட போட்டியில் கடந்த வருடம் பளுதூக்கும் அணி கலந்து கொண்டது. பளு தூக்கும் அணியினை உருவாக்குவதற்கு வடமாகாண உதவி கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் சுகிதன் ஆசிரியருக்கு உதவியாக இருந்தமை குறிப் பிடத்தக்கது.







இதனடிப்படையில் கடந்த வருடம் நடைபெற்ற தேசியமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் ஏ.விதன் என்ற மாணவன் பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பதக்கம் பெற்று சாதனை புரிந்த விதன் என்பவரே மத்திய கல்லூரியின் பளுதூக்கும் பிரிவின் பயிற்சியாளராக தற்பொழுது செயற்பட்டு வருகின்றார்.இவருடைய வழிப்படுத்தலில் சாந்தகோபி இம்முறை தங்கப்பதக்கத்தி னைப் பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவின் பிறந்த தினத்தை முன்னிட்டு முல்லையில் இந்துக் கோயில்கள் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று 7 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டும், ஜனாதிபதியின் 67-வது பிறந்ததினத்தை முன்னிட்டும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இந்துக் கோயில்கள் புனரமைக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று மொபிடெல் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறுகையில்,

30 வருட கால பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக சீரழிந்து போயிருந்த நாட்டை ஒரே தேசமாக, ஒரே குடையின் கீழ் ஒன்றுபடுத்தி வரலாற்றுச் சாதனை புரிந்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று 7 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டும் ஜனாதிபதியின் 67-வது பிறந்ததினத்தை முன்னிட்டும் நாடு முழுவதிலும் சகல சமய வழிபாடுகளை 'கிருவாபத்துவென் தல் அருணட்ட' என்ற அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள சகல மாவட்டங்களிலும் சர்வ சமய வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழ் மக்களின் சமய வழிபாட்டுக்காக முல்லைத்தீவு மாவட்டதிலுள்ள இந்துக் கோயில்களை புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தெற்கில் மாத்தறையில் இருந்து வடக்கில் வவுனியா வரையில் 705 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சைக்கிள் சவாரியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் முன்னணி சைக்கிளோட்ட வீரர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் நவம்பர் 18-ம் திகதி கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## இலங்கைக்கு...

எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை விளக்க ஒவ்வொரு நாட்டுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் மனித உரிமை நிலை மீளாய்வு செய்யப்பட்டபோது போர் உச்சக்கட்டத்தில் இருந்தது. அந்தப் போரின் போது இலங்கை இராணுவம் போர் குற்றங்களைப் புரிந்ததாகக் கூறப்படுவது தொடர்பாகவும், போரின் போது பலர் ஒரே சமயம் கொல்லப்பட்டது உட்பட இதுவரை விசாரிக்கப்படாத பல அத்துமீறல்கள் தொடர்பாகவும் இலங்கை அரசு முன்னேற்றங்களைக் காணவில்லை என்று ஹியூமன் ரைட்ஸ் வாட்ச், அம்னெஸ்ட்டி போன்ற அமைப்புக்கள் கூறுகின்றன.

போர் முடிந்த பிறகு கூட அரசு சித்திரவதையை கைகொள்வதாகவும், ஆட்கள் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போவது தொடர்வதாகவும், பத்திரிகையாளர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தல்களையும் தாக்குதல்களையும் தொடர்ந்து சந்திப்பதாகவும் இந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் உட்பட பல அதிகாரங்கள் தற்போது ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டுள்ளது நிலைமையை மோசமாக்குவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

ஜெனிவாவில் இந்த மீளாய்வுக் கூட்டம் தொடங்கும் முன்பு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்ட மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப், போரின் முடிவில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என்று தான் கூறிய முந்தைய எண்ணிக்கையை மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கை அரசோ எட்டாயிரத்துக்கும் குறைவானவர்களே போரின் இறுதிக் கால கட்டத்தில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கிறது.

தனக்கு எதிராக கூறப்படும் மனித உரிமை மீறல்களை தாம் எதிர்கொண்டு வருவதாக கூறும் இலங்கை அரசு, ஆயிரக்கணக்கான முன்னாள் புலிகளுக்கு மறுவாழ்வு அளித்தமை தொடர்பாக அரசுக்கு மேலும் அங்கீகாரம் கிடைத்திருக்க வேண்டும் என்று கூறுகிறது.

அதேநேரம் இம்முறை தாம் அதிக நாடுகளின் ஆதரவைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது.

இன்று இலங்கை சூழல் குறித்து மூன்றரை மணி நேர விவாதம் நடக்கும்.

அதன் பிறகு இந்தியா, ஸ்பெயின் மற்றும் பெனின் நாடுகள் ஒரு அறிக்கையை தயாரித்து அதை மனித உரிமை கவுன்சிலில் அளிக்கும். மனித உரிமை பேரவையின் பொறி முறைக்கு உட்படுத்தப்படும் பிற உறுப்பு நாடுகளைப் போல இந்த அறிக்கையை இலங்கையும் அமுல்படுத்தியாக வேண்டியிருக்கும். (ந-11)

## ஈரானுக்...

...யிலிருந்து 60 சதவீதத்திற்கும் அதிகமாக ஈரானுக்கே தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஈரான் மீதான பொருளாதார தடை இருபக்க வர்த்தகத்தை பெரிதும் பாதித்துள்ளது.

இதனால் தேயிலை சந்தையில் இலங்கைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியில் கடந்த வாரத்தை விட இந்த வாரம் கிலோ ஒன்றுக்கு 45ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் கிலோ 452ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட தேயிலை தற்போது 407.31 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுமதி முகவர்கள் தெரிவிக்கின்றனர். (ந-11)

## கிடங்கு நீரில் மூழ்...

மட்டத்தில் இருந்துள்ளது.

இதனை அவதானிக்காத குழந்தை கிடங்கின் அருகில் நடந்து சென்ற போது அதற்குள் தவறி விழுந்துள்ளது.

இதனை அவதானித்த வீட்டார் குழந்தையை கிடங்கிலிருந்து மீட்டு உடனடியாக 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அக்கரையன்பற்று வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

ஆனால் வைத்தியசாலையில் வைத்தியர் யாருமே அங்கு கடமையில் இருக்கவில்லை. கடமையிலிருக்க வேண்டிய வைத்தியர் விடுமுறைக்காக வெளியே சென்றுள்ளார்.

மாற்று வைத்தியர்கள் யாருமே அவ் வைத்தியசாலையில் காணப்படவில்லை. வைத்தியம் செய்யக்கூடிய நிலைமையிலும் யாரும் அங்கு இருக்கவில்லை.

இதனால் குழந்தையை அங்கிருந்து உடனடியாக 22 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு அவசரமாக உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

எனினும் குழந்தை சிகிச்சைக்கு உட்படுத்த முன்பே வழியில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குழந்தையின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் உரிய நேரத்தில் கடமையில் வைத்தியர்கள் இல்லாததினாலேயே இப்பரிதாப உயிரிழப்பு ஏற்பட்டதாக அவ் ஊர் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (ந-11)

## முள்ளிவாய்...

152 மில்லிமீற்றர் வகையான 4 செலுத்திகளும், 130 மீற்றர் வகையான ஒரு செலுத்தியும், படகு உதிரிப்பாகங்களும் அவற்றுள் உள்ளடங்குகின்றன.

இதுதவிர, 120 குதிரைவலுக் கொண்ட 2 இயந்திரங்கள் கொண்ட படகொன்றும் நேற்று மீட்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார். (ந-11)

# மீண்டும் மெஸ்சிக்கு தங்கச் சப்பாத்து




ஐரோப்பாவின் உள்ளூர் கால்பந்து தொடர்களில் அதிக கோல்கள் அடித்ததற்காக, பார்சிலோனா அணியின் நம்பிக்கை நட்சத்திரம் லியோனல் மெஸ்சிக்கு தங்கச் சப்பாத்து விருது வழங்கப்பட்டுள்ளது.

25 வயதான நட்சத்திர வீரர் மெஸ்சி தங்கச்சப்பாத்து விருதைப் பெறுவது இரண்டாவது முறையாகும். தனக்கு கிடைத்த தங்க சப்பாத்து விருதை, தன்னுடைய அணியின் சக வீரர்களுக்கு மெஸ்சி அர்ப்பணித்துள்ளார்.

விருது பெற்ற மெஸ்சி கூறுகையில்,

கோல்கள் அடித்ததற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. ஆனால், என்னுடைய அணியினர் இல்லாமல், என்னால் கோல்களை அடிக்க முடியாது என்றார்.'

பார்சிலோனா அணிக்காக ஆடிவரும் மெஸ்சி, ஸ்பானிஷ் லீக் கால்பந்து தொடரில் மொத்தம் 50 கோல்கள் அடித்திருந்தார்.

மற்றொரு முன்னணி வீரரும், மெஸ்சியின் போட்டியாளராகக் கருதப்படுபவருமான ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்ரியானோ ரொனால்டோ இத்தொடரில் 46 கோல்கள் அடித்து இரண்டாவது இடம் பிடித்தார்.

ஆர்ஜென்ரீனா நாட்டு வீரரான மெஸ்சி 2010-ம் ஆண்டு முதன்முறையாக தங்கச்சப்பாத்து விருதைப்பெற்றார். அப்போதைய சீசனில் அவர் மொத்தம் 34 கோல்கள் அடித்திருந்தார்.

2012-ம் ஆண்டுக்கான உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதுக்கான போட்டியிலும் மெஸ்சி தற்போது முன்னிலை வகித்து வருகின்றார்.

உலகின் சிறந்த கால்பந்து வீரருக்கான பீபா விருதை மெஸ்சி தொடர்ச்சியாக மூன்று முறை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சச்சினால் மீண்டு வர முடியும் முன்னாள் பயிற்சியாளர் ஜான் ரைட்

இங்கிலாந்துக்கெதிரான டெஸ் தொடரில் சச்சின், மீண்டும் பார்முக்கு திரும்புவார் என்று இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜான் ரைட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சாதித்த சச்சின், சமீப காலமாக துடுப்பாட்டத்தில் திணறுகிறார். ஐந்தாவது ஐ.பி.எல் தொடருக்கு பின்பு இது வரை ஒரு அரைச்சதம் கூட அடிக்கவில்லை.

கடைசியாக இவர் விளையாடிய 9 இனிங்சில், 6 முறை போல்டானது பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது. இங்கிலாந்து தொடருக்குமுன்பு இழந்த பார்மை மீட்க ரஞ்சி கிண்ண போட்டியில், மூன்று ஆண்டுகளுக்கு பின்பு களமிறங்குகிறார்.


இதுகுறித்து இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜான் ரைட் கூறுகையில் சச்சினை பொறுத்த வரையில் இடது கை வேகப்பந்து வீச்சாளர்களிடம், அதிகமாக போல்டாகி வருகிறார்.


இதை நான் தவறாக சொல்லவில்லை ஏனெனில் 2002 மேற்கிந்திய தீவுகள் தொடரின் போது, இடது கை வேகப்பந்து வீச்சாளர் பெட்ரோ காலின்சிடம் அடுத்தடுத்து வீழ்ந்தார்.

அதே நேரம், இது கவலைப்படும் அளவுக்கு பெரிய விடயமல்ல. ஏனெனில் தொழில்நுட்ப தவறுகள் ஏற்படுவது சகஜம் தான். பல்வேறு காலங்களில் இப்படிப்பட்ட நிலைகளில் இருந்து மீண்டு வந்துள்ளார் சச்சின். இம்முறையும் மீள்வதற்கு வாய்ப்புள்ளது. இதற்கான திறமை அவருக்கு உள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய தொடரில் அடைந்த தோல்வி, சச்சினை மிகவும் பாதித்திருக்கும் என்றும் எதிர்வரும் இங்கிலாந்து, அவுஸ்திரேலிய தொடர்களில் சதம் அல்லது இரட்டை சதம் அடித்தால், அவருக்கு மிகவும் தூண்டுகோலாக அமையும் எனவும் கூறியுள்ளார்.

## இலங்கை–நியூசிலாந்து ஒருநாள் போட்டி இன்று






இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி ஒரேயொரு இருபது–20 போட்டி ஐந்து ஒரு நாள் சர்வதேசப் போட்டி மற்றும் இரண்டு டெஸ் போட்டியில் விளையாடி வருகின்றது. முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி பகல் இரவாக 2:30 மணிக்கு பல்லேகல சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கில் இடம் பெறவுள்ளது. மஹேலஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை அணியும் ரொஸ் ரெயிலர் தலைமையிலானநியூசிலாந்து அணியுமே மோதவுள்ளன. இலங்கை, நியூசிலாந்து அணிக்கு இடையிலான முதலாவது இருபது–20 போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ராஜீவ் கொலை தொடர்பில்...

இது தொடர்பாக ரகோத்தமன் எழுதியுள்ள 'Conspiracy to kill Rajiv Gandhi-from CBI Files' என்ற புத்தகத்தில், ராஜீவ் கொலைச்சம்ப வத்தின் போது அங்கிருந்த உளவுத்துறையின் வீடியோ கிராபர் அதனைபடம்பிடித்ததாக தெரிவித்துள்ளார்.

ஆனால், அந்த வீடியோ காணாமல் போய் விட்டதாகவும், அப்போது ஐ.பி (இன்டலிஜென்ஸ் பீரோ) தலைவராக இருந்த எம்.கே.நாராயணனை, ராஜீவ் கொலை வழக்கின் சிறப்பு புலனாய்வு குழு தலைவர் டீ.ஆர்.கார்த்திகேயன் தப்பவிட்டு விட்டதாகவும் ரகோத்தமன் தனது புத்தகத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட அதே மே 21-ம் திகதியன்று ஸ்ரீபெரும்புதூரில் திமுக தலைவர் கருணாநிதி பொதுக்கூட்டத்தில் பேச இருந்[illegible]. ஆனால் அது திடீரென ரத்துச் செய்யப்பட்டதாகவும் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள ரகோத்தமன், இது தொடர்பாக கருணாநிதியிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று தாம் வலியுறுத்தியதாகவும், ஆனால் அது தேவையில்லாத பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும், அவரிடம் விசாரிப்பதால் பயனில்லை என்றும் கூறி, ராஜீவ் கொலை வழக்கின் சிறப்பு புலனாய்வு குழு தலைவர் டி.ஆர்.கார்த் திகேயன் அதனை தடுத்து விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் ரகோத்தமனின் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள கார்த்திகேயன், இது மலிவான விளம்பரம் என்றும், ராஜீவ் கொலை தொடர்பாக சேகரிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (எ-11) (இது தொடர்பான மற்றுமொரு செய்தி உள்ளே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் விமல்...

இரத்துச் செய்ய அமைச்சர் விமல் வீரவன்ச நேர்மையாக செயற்பட முயற்சித்து வரும் நிலையில்; அந்தச் திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியிருக்கின்றார்.

13-வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தினால் நாட்டில் பிரிவினைவாதம் ஏற்படும் என்றால், அந்த திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்காது, பிரிவினை வாதத்திற்கு உதவும் அரசாங்கத்தில், விமல் வீரவன்ச இருக்கக்கூடாது உடனடியாக பதவிவிலக வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்ற 13-வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் தடையாக இருப்பதால், அதனை இரத்துச் செய்ய வேண்டும் என விமல் வீரவன்ச கூக் குரல் இட்டு வருகின்றார்.

உண்மையில் அமைச்சராக இருக்கும் விமல் வீரவன்சவின் பணி அரசாங்கத்திற்கு துதிப்பாடல் பாடுவதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# காணி அபகரிப்பு தொட...

தீர்மானத்ளதிற்கு அமைவாக இந்தக் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான வீடுகளையும் காணிகளையும் விட்டு இராணுவத்தினர் வெளியேற வேண்டும்.

அங்கு மக்கள் மீள் குடியேற்றப்பட வேண்டும் என கடந்த மாதம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியதோடு அமைச்சர், ஆளுநர் மற்றும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் ஆராய்வதற்காக இன்று விசேட மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடத்தப்படுகின்றது.

கடந்த கூட்டத்தை போன்றே இன்று நடைபெறும் இக் கூட்டத்திலும் காரசாரமான விவாதங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-6)

# சீரற்ற காலநிலையால்...

கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவ் இயற்கை அனர்த்தங்களினால் 513 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் 65 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 139 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 411 பேர் 24 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு, நுவரெலியா, கேகாலை, குருநாகல், கண்டி, கொழும்பு, திருகோணமலை, கிளிநொச்சி, கம்பஹா, மாத்தளை, மன்னார், மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே சற்று அதிகமான இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளில் 5 ஆயிரத்து 583 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 785 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 503 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 721 பேர் ஒன்பது நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு கிராம சேவகர் பிரிவுகளில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் 3 கிராம சேவகர் பிரிவுகளில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு, ஐந்து வீடுகள் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 கிராம சேவகர் பிரிவுகளில் 2 ஆயிரத்து 164 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 107 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 298 குடும் பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 186 பேர் இரண்டு நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 853 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 6 கிராம சேவகர் பிரிவுகளில் ஆயிரத்து 101 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 626 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேர் 7 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 4 கிராம சேவகர் பிரிவுகளில் 469 குடும் பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 236 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய மாவட்டங்களிலும் சிறுசிறு பாதிப்புக்கள் மழையால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, மாத்தறையில் பெண் ஒருவரும் யாழ்ப்பாணத்தில் ஹாட்லிக்கல்லூரிமாணவன்ஒருவரும்முல்லைத்தீவில்குழந்தையொன்றுமாக மூவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# மரண அறிவித்தல்

சிவநெறிப் புரவலர் **தம்பியப்பா சண்முகலிங்கம்** (J.P)
(உரிமையாளர் : நோதேண் இன்டர்ஸ்ரீஸ் (பி) லிமிடெட்-யாழ்ப்பாணம்.
தலைவர் : சைவபரிபாலனசபை - யாழ்ப்பாணம்)



சுருவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நீராவியடி, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட தம்பியப்பா சண்முகலிங்கம் 28.10.2012 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-கண்ணம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், சுபோதினி, சுபேந்திரன், Dr.வினோதினி, நந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr.உதயகுமரன், பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சத்யனின் அருமைப்பேரனும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற Dr.இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, ஆனந்தலெட்சுமி, சந்திரமதி, ஸ்ரீஸ்கந்தராஜா, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.11.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'குற்றாலம்'
43, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8038

தகவல் :
குடும்பத்தினர்

(871)


## தேவை

வன்னியில் ஆரம்பிக்கப்பட உள்ள வைத்தியசாலைக்கு டாக்டர் (RMO) மற்றும் மருந்தாளர் (Pharmacist) தேவை.

தங்குமிட உணவு வசதியுண்டு.

(869) தொடர்பு:- 0777902974

## காணி விற்பனைக்கு

பயன்தரு மரங்கள், வீடு, கிணறு ஆகிய வசதிகள் அடங்கிய 40 பரப்புக் காணி புன்னாலைக்கட்டுவன் ஈவினை என்ற இடத்தில் பகுதியாகவோ, முழுமையாகவோ விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- R.N.ஈஸ்வரன்
0754161462

Note :- தரகர்கள் தேவையில்லை.

## வழிகாட்டி

நெல்லியடியில் வகுப்புக்கள் ஆரம்பம் - 05.11.2012

- கிராம சேவையாளருக்கான போட்டி பரீட்சை விசேட வகுப்புகள் முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை ஆசிரியர் : த.தவசேகர்
- இலங்கை சட்டக்கல்லூரி (LAW COLLEGE) போட்டிப் பரீட்சை தயார்ப்படுத்தல்கள் இது துறைபோந்த சட்டத்தரணிகளாலும் சட்ட விரிவுரையாளர்களாலும் நடத்தபடுகிறது.
- B.A. Social Work போட்டிப் பரீட்சை தயார்ப்படுத்தல்கள் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 100% வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் கற்கைநெறி)
- Markering Communication சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் துறைகளை நன்கு விளங்கிக் கொள்ள சுயதொழில், தனியார் துறைகளில் இலகுவில் வேலை வாய்ப்பைப் பெற்று கொள்வதற்கான ஓர் கற்கை நெறி

பதிவுகள் ஆரம்பமாகி விட்டன
தொடர்புகளுக்கு: 0776699892, 0773867257
வழிகாட்டி முடக்காட்டு சந்தி, பருத்தித்துறை வீதி, நெல்லியடி

## கோழிக் குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும்.

புறொயிலர் குஞ்சுகள் ரூபாய் 70 /- மட்டுமே

முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P: 0772557605

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. T.P: 0778996085

## 30 நாட்களில் ஆங்கிலம்

Spoken English (முழுமையான ஒருபயிற்சி பட்டறை)
அடிப்படை ஆங்கிலத்திலிருந்து கற்பிக்கப்படும்.

- English சரளமாக கதைப்பது உறுதி செய்யப்படும். (முடியாவிடின் Course Fee மீளளிப்பு செய்யப்படும்)
- ஆங்கிலத்தை ஆங்கிலச் சூழலில் கற்பிப்பதுடன் தேவையான விளக்கங்கள் மாத்திரம் தமிழில் வழங்கப்படும்.

Uk,Australia செல்லும் மாணவர்களுக்கான IELTS,A1,B1 தயார் படுத்தல்கள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது.

- பாடசாலையை விட்டு விலகியோர், தொழில் எதிர்பார்ப்போருக்குரியது. [தொழில் செய்வோருக்கான காலை,மாலை மற்றும் இரவு நேர வகுப்புக்கள் நடைபெறும்]
- (Writing, Listening, Reading, Speaking ஆகிய ஒவ்வொரு பிரிவும் தனித்தனி அனுபவமிக்க Colombo ஆசிரியர்களால் சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்படும் ஒருபிரிவில் 10 பேரும் மாத்திரமே அனுமதிக்கப்படுவதால் அனுமதிக்கு முந்துங்கள்)

தூர இட மாணவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வருமானம் தரும் தொழில்நுட்பக் கற்கை நெறிகளை தொடருங்கள்.

**Electrical Wiring**- மின் இணைப்பாளர் (7 days)
**Plumbing**-நீர் குழாய் பொருத்துனர் (4 days)
**Computer Hardware Engineering**-கணணி திருத்துதல்.(4 days)
**Mobile phone Repering**-கையடக்கத் தொலைபேசி திருத்தல்(4days)

இக் குளிர்கால குறுங்கால பாடநெறிகள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நீங்கள் சுயமாக அல்லது நிறுவனங்களில் தொழில் புரிவது உறுதி செய்யப்படும்.

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P: 021 222 4728, 0777444225
Info@iiseees.lk
(C-1409)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது